Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 318 பங்குனி. March. 2023

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

29TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien &
Schmuck
32 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# பாலின சமத்துவமும் இலங்கையும்

## ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என விரும்பும் மனநிலை முற்றாக மறையவில்லை

ரஞ்ஜனி சுப்ரமணியம் (இலங்கை)



அனைவருக்கும் எங்கள் சர்வதேச மகளிர் தின வாழ்த்துகள்

international women's day march 08

சர்வதேச மகளிர் தினச் சிறப்பிதழ் கௌரவ ஆசிரியர்

கலாசூரி திவ்யா சுஜேன் (இலங்கை)

Teenage பெண்ணின் அப்பாவா நீங்கள்?





கருகுமணி:

# சொல்லாலும் உடலாலும் மரியாதை



ஜப்பானியர்கள் ஒருவரையொருவர் காணும்போது அன்றைய நாளின் வணக்கம் கூறும் வழக்கம் உண்டு. அது 'நல்ல காலைப்பொழுது' என்றோ, 'நல்ல நாள்' என்றோ, 'நல்ல மாலை' என்றோ அமையலாம். அப்போது அவர்கள் உடலை இடுப்பிலிருந்து வளைத்து கீழே நோக்கி வணக்கம் கூறுவார்கள். வணக்கம் என்ற தமிழ்ச்சொல் 'வணக்கு' என்ற அடிச் சொல்லிலிருந்தே பிறந்தது.'வணக்கு'என்றால் வளைத்தல் எனப் பொருள்படும்.தமிழிலும் பண்டைக் காலத்தில் வணக்கம் கூறும்போது உடலை வளைத்து மரியாதை செலுத்திக் கூறப்பட்டிருக்க வேண்டும்.இன்று தலையை மட்டும் சிறிது தாழ்த்துகின்ற வழக்கம் சிலரிடம் காண்கிறோம்.ஆனால் ஜப்பானியர் அதனை இன்றும் பேணுகிறார்கள். இதைவிட மொழியினாலே ஜப்பானியர் மரியாதை செலுத்துகிறார்கள்.

ஜப்பானிய மொழியிலே பேசுகின்றவர் ஒருவர் தன் பேச்சினைக் கேட்பவர் தொடர்பான எதனைக் குறிப்பதாயினும் அதனை பெருமைப்படுத்தி அல்லது மாட்சிமைப்படுத்திக் கூறுவது நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்தவல்லது. எடுத்துக்காட்டு ஒன்றினைப் பார்க்கலாம்.நான் சாப்பிடும் மீனைக் குறிப்பதென்றால் 'ஸகனா' என்றால் போதும். ஆனால் என் நண்பர் உண்ணும் அதே மீனைக் குறிப்பதென்றால் 'ஓஸகனா' என்று சொல்ல வேண்டும்.இங்கு 'ஒ' என்னும் முன்னொட்டு மரியாதையைக் குறிப்பதாக அமையும். அது 'மாட்சிமை பொருந்திய' இல்லது 'சிறப்புடைய' என்னும் பொருளைத் தருவதாகும். எனவே நான் தின்னுவதை 'மீன்' என்றும் நண்பர் உண்ணும் அதே மீனை 'மாண்புமிகு மீன்' என்றும் அழைக்கும் ஜப்பானிய மொழிமரபு அவர்களுடைய மரியாதை செலுத்தும் பண்பினைக் காட்டுகிறது.




தகைசால் பேராசிரியர்
**அ.சண்முகதாஸ்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

இந்த மரியாதை நம்மிடமும் பண்டைக் காலத்தில் இருந்தது. அக்காலத் தமிழ்க் காதல் பாடல்களிலே தோழியோ தலைவியோ தலைவன் நாட்டை அல்லது மலையைக் கூறுமிடத்து 'நல் நாடு', நல் மலை' என்று கூறுவது வழக்கம். தலைவனுக்குச் செலுத்தும் மதிப்பையும் உணர்வையும் அவனுடன் சார்ந்த பொருள்களுடன் 'நல்' என்னும் அடைச் சொல்லாலே புலப்படுத்தினர். 'நல்'என்னும் மதிப்புயர்ச் சொல்லினை தம் நாடு,ஊர், தமிழ் முதலியனவற்றைக் குறிப்பிடும் போது 'நல்நாடு', 'நல்லூர்', 'நல்தமிழ்' எனப் பண்டைத்தமிழர் பயன்படுத்தினர்.



வெற்றிமணி
தமிழ் எங்கள்
உயிருக்கு மேல்
ஓசை : 318



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

சர்வதேச மகளிர் தினச் சிறப்பிதழ்
கௌரவ ஆசிரியர்
கலாசூரி திவ்யா சுஜேன்
MBA & MA Dance

Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# கலாசூரி திவ்யா சுஜேன் (அபிநயக்ஷேத்ரா அதிபர்) கலைச் சேவைக்கு வெற்றிமணி வழங்கும் கௌரவம்

**2023** பங்குனி 08சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, தாயகத்தில் வசிக்கும் கலாசூரி திவ்யா சுஜேன் (முதுநிலை வணிக நிர்வாகம், முதுகலைமாணி பரதநாட்டியம்) அவர்களை, வெற்றிமணிப் பத்திரிகையின் பங்குனி மாதம் சிறப்பிதழின் ஆசிரியராக கௌரவித்து மகிழ்கின்றது.

பல வருடங்களாக வெற்றிமணி பத்திரிகையில் நின்னைச் சரணடைந்தேன், எத்தனைகோடி இன்பம் வைத்தாய் என்ற பாரதியின் மகுடவரிகளை தலைப்பாகக் கொண்டு 50க்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதியவர், எழுதி வருபவர்.தாயகம் முழுவதும் கலை நிகழ்ச்சிகள், நட்டுவாங்க வகுப்புகள், பல்துறை சார்ந்த விழாக்கள் என வார இறுதியில் குவிந்து இருக்கும் பொழுதுகளிலும் குறித்தவணையில் தன் முயற்சிகளை சிறப்பாக வெளிப்படுத்தும் ஆற்றலும் அக்கறையும் வியக்கத்தக்கது.



சர்வதேச மகளிர் தினச் சிறப்பிதழ்
கௌரவ ஆசிரியர்
கலாசூரி திவ்யா சுஜேன்
MBA & MA Dance

உலகப்புகழ் பத்மா சுப்பிரமணியம் அவர்கள் இலங்கையில் உள்ள நடன ஆசிரியர்களுக்குப் பயிற்சிப்பட்டறை வழங்கி, வர்ணத்தினைக் கற்றுக்கொடுத்து அதனை ஆற்றுகைப்படுத்தி,அதில் சிறந்த கலைஞரைத் தெரிவு செய்து "அகில உலக பத்மா சுப்பிரமணியம் விருது" வழங்கி கௌரவித்தார். அவ்விருது திவ்யா சுஜேன் அவர்களுக்கு கிடைக்கப்பெற்றது. அப்பொழுது திவ்யா சுஜேன் அவர்களின் நடனத்தின் மீதான புரிதலையும், வேகமாக உள்வாங்கிக் கொள்ளும் தன்மையையும் பாராட்டினார். திவ்யா சுஜேன் இந்தியாவில் மிகப் பிரசித்தி பெற்ற பத்து சிவ ஆலயங்களில் நாட்டியாஞ்சலி ஆற்றுகை வழங்கி உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது கலைச் சேவை மேலும் ஓங்கி ஒலித்திட வெற்றிமணி வாழ்த்துகின்றது. இவரது ஆளுமைகள் பற்றி கலாவித்தகர்கள் சொல்வதை 24 ம் பக்கத்தில் பார்க்கலாம்.

# அதிரவைத்த அண்ணாமலை!



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை இலங்கை அரசியலில் மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுள்ள கலாசார நிலயத்தின் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காகவே அவர் இலங்கை வந்திருந்தார். இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் அமைக்கப்பட்ட இந்த நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்துவைக்கப்பட்டது. இந்திய மத்திய அமைச்சர் எல்.முருகனுடன் அண்ணாமலை வந்திருந்த போதிலும், அதிகளவுக்கு சச்சையை ஏற்படுத்தும் உரைகளை அண்ணாமலை நிகழ்த்தியிருந்தார். இதன் மூலம் அரசியலில் அதிகளவு கவனத்தை ஈர்ந்த ஒருவராக அண்ணாமலை இருந்துள்ளார். இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் அவரது உரைகள் அதிகளவு கவனத்தைப் பெற்றிருந்தது.

பொதுவாகவே அண்ணாமலையின் உரைகள் சர்ச்சைகளை ஏற்படுத்துபவையாகத்தான் இருக்கும். அதன்மூலம் ஊடகங்களின் பார்வையை தன்மீது வைத்திருப்பதில் அவர் எப்போதும் வெற்றிபெறுபவர். தமிழக பா.ஜ.க. தலைவராக நியமிக்கப்பட்ட குறுகிய காலத்திலேயே அவருடைய செல்வாக்கு உயர்வதற்கும், தமிழக மக்கள் மத்தியில் பா.ஜ.க. மீதான ஆதரவு அதிகரிப்பதற்கும் அவரது இந்த உபாயங்களும் காரணமாக இருந்துள்ளன. தமிழகத்தில் பா.ஜ.க.வின் செல்வாக்கை உயா்த்துவதற்கு ஈழத் தமிழர் விவகாரத்தையும் அவர் நுட்பமாகப்



04 ஆம் பக்கம் பார்க்க...



03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# அதிரவைத்த அண்ணாமலை!

பயன்படுத்திவருகின்றார். இலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகளுடனான அவரது உறவாடலும் இதற்கு உதவியாக இருக்கின்றது.

குறுகிய காலத்துக்குள் யாழ்ப்பாணத்துக்கான தமது இரண்டாவது விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்த அவர், நிகழ்த்திய உரைகள் தென்னிலங்கையில் மட்டுமன்றி, வடக்கிலும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கின்றது. தமிழகத்தில் ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல் நடைபெறும் நிலையில், அதற்கான தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்க வேண்டிய அண்ணாமலை, அதனைத் தவிர்த்துவிட்டு சுமார் நான்கு நாட்கள் வரையில் இலங்கையில் நின்றிருந்தார். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தைப் பயன்படுத்தி இலங்கைக்குள் கால் பதித்த அவர், யாழ்ப்பாணத்தில் பல நிகழ்வுகளில் பங்கேற்றார். முக்கிய பிரமுகா்கள் பலரையும் சந்தித்தார். பின்னா் கொழும்பு சென்று அங்கும் முக்கிய சந்திப்புக்களை மேற்கொண்டார்.

ஈரோடு தொகுதி இடைத்தோ்தலில் காங்கிரஸ் – திமுக கூட்டணி வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளது. நீண்டகாலமாக அது ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இடைத் தோ்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் அவா் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளது. அ.திமு.க. வேட்பாளா் தென்னரசுவை பா.ஜ.க. ஆதரிக்கின்றது. இதில் வெற்றிபெறமுடியாவிட்டாலும் கணிசமான வாக்குகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது அண்ணாமலையின் திட்டம். இலங்கையில் தான் நிகழ்த்தும் உரைகள் இந்த இடைத்தோ்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அண்ணாமலையின் கணிப்பு. அதேவேளையில், ஈழத் தமிழா் விவகாரத்தை கையில் எடுப்பதன் மூலமாக தமிழகத்தில் தன்னுடையதும், பாஜ.க.வினதும் செல்வாக்கை உயா்த்திக்கொள்வதற்கு அண்ணாமலை தொடா்ந்தும் முயற்சிக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார நிலையம் யாருடைய கைகளில் இருக்கும் என்பது பெரும் கேள்வியாக இருக்கும் நிலையில், இது தமிழா்களுக்காகவே அமைக்கப்பட்டது, அவா்களிடமே நாம் இதனைக் கையளிக்கின்றோம் என பலத்த கைதட்டல்களுக்னு மத்தியில் அறித்தது முதல், அவரது பெரும்பாலான உரைகள் சா்ச்சையை ஏற்படுத்தியிருப்பது இதனால்தான். பொதுஜனபெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர, பாராளுமன்ற உறுப்பினா் விமல் வீரவன்ச ஆகியோா் அண்ணாமலையின் கருத்துக்கு பதிலடி கொடுத்துள்ளார்கள்.

அண்ணாமலை கூறுவதுபோல் 13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வாக அமையாது. ஏனெனில் 13 ஆவது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் உளறுவதை இந்தியத் தரப்பினர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேரம் அல்ல. 13ஆவது திருத்தத்தை பாராளுமன்றம் ஊடாக முழுமையாக இல்லாதொழிப்பதற்கான நேரமே கணிந்துள்ளது. இலங்கையில் 13 இற்கு எதிராக பிக்குகள் கூட வீதியில் இறங்கியுள்ளமை அண்ணாமலைக்குத் தெரியவில்லையா? இது பௌத்த நாடு என்பதை அவர் மறந்துவிட்டாரா என சரத் வீரசேகர தெரிவித்திருக்கின்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களின் போது மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி போட்டியிட்டாலும் நாம் அதிர்ச்சியடையத்தேவையில்லை என்ற நிலைமையே தற்போது காணப்படுகின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், வடக்கையும், கிழக்கையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கைகளிலே இலங்கை அரசாங்கம் எப்போது தாரை வார்த்தது? வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின்தலைவராக மோடி எப்போது பிரகடனப்படுத்தப்பட்டார்?

அண்ணாமலையின் கருத்துக்கள் ஊடாக எம்மிடம் எழுந்துள்ளஇந்த கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்க வேண்டும். அண்ணாமலை அண்மையில் இலங்கை வந்து தமிழகம் திரும்பிய பின்னர் சர்ச்சைக்குரிய இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இதன் பின்புலம் தொடர்பில் நாம் தீவிரமாக ஆராய வேண்டும். இந்தியாவில் உள்ள ஒரு தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரை வைத்து அரசியல் நடத்த, அண்ணாமலை மோடியையும் வடக்கு – கிழக்கையும் இணைத்துப் பேசி அரசியல் நடத்துகின்றார். இலங்கை அரசாங்கம் இவற்றையெல்லாம் கைகட்டி ஏன் வேடிக்கை பார்க்கின்றது, எல்லாம் மர்மமாகவே உள்ளது என்று விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தென்னிலங்கையில் இவ்வாறான விமா்சனங்கள் வரும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், அதனையிட்டு கவலைப்படும் நிலையில் அண்ணாமலை இல்லை. தற்போதைய நிலையில் ஈழத் தமிழா்கள் தொடா்பாக எதனையாவது இந்தியாவினால் செய்ய முடியுமாக இருந்தால் அது தன்மூலமாக மட்டுமே சாத்தியமாகும் என்ற கருத்தை அவா் உருவாக்கியிருக்கின்றார். தமிழகத்தில் பலம்வாய்ந்த அணிகளில் ஒன்றாக இருந்த அ.தி.மு.க. இரண்டாக உடைந்திருப்பது தி.மு.க.வுக்கு மட்டும் வாய்ப்பாக இல்லை. இதனைப் பயன்படுத்தி தமிழகத்தில் இரண்டாவது கட்சியாக வருவதற்கு பா.ஜ.க. முயற்சிப்பது இரகசியமானதல்ல. ஆனால், ஈரோட்டில் பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலை மிகவும் சொற்பமாக இருப்பதால் அங்கு களமிறங்கி மண்ணைக் கவ்வாமல் அ.தி.மு.க. வேட்பாளா் தென்னரசுவை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை அண்ணாமலை எடுத்தார்.

ஆனால், இடைத் தோ்தலைத் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ள அரசியலுக்கு ஈழத் தமிழா் விவகாரத்தை கைகளில் எடுத்து செயற்படுவதற்கு அண்ணாமலை திட்டமிட்டிருப்பதாகவே தெரிகின்றது. தென்னிலங்கையில் சிங்கள இனவாதிகள் மத்தியில் அவருக்கு எதிராக எழக்கூடிய எதிர்ப்புக்களும், கோஷங்களும் தமிழகத்தில் பா.ஜ.க.வின் செல்வாக்கை அதிகரிக்கும். அதேவேளையில் இலங்கையில் செயற்படும் சிவசேனை, மற்றும் தமிழ்க் கட்சிகளுடனும் அவர் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருக்கின்றார். நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கின்றார். தமிழ்க் கட்சிகளுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் ஒரு உறவுப் பாலமாக தன்னால் மட்டும்தான் செயற்படமுடியும் என்ற நம்பிக்கையையும் அவா் உருவாக்கிவருகின்றார்.

அவரது சமீபத்திய யாழ்ப்பாண விஜயத்தின் போது மறைமுகமாகச் சொல்லப்பட்ட செய்திகள் பல. தமிழகத்தில் தமது செல்வாக்கை அதிகரித்துக்கொள்வதற்காக அவர் இந்தக் காய்நகா்த்தல்களை மேற்கொண்டாலும் கூட, இதன் மூலமாக எவ்வாறான பலன்களை தமது மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும், உறுதியான அரசியல் தீர்வு ஒன்றுக்கு இந்த நிலைமைகளை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதையிட்டு தமிழ்த் தலைமைகள் சிந்தித்து செயற்பட்டால் அது ஈழத் தமிழருக்கு பயனுள்ளதாக அமையும்.












# அரசியலில் நன்றி மறத்தல்

## பெண் என்ற காரணத்தால் சில தலைமைகள்

நியூசிலாந்து நாட்டில் 2017இல் பிரதமராக தெரியப்பட்டபோது ஜசின்டா ஆர்டனின் வயது 37. உலகிலேயே மிக இளைய வயதில் ஒரு ஆட்சித் தலைவியாக பொறுப்பேற்ற ஜசின்டாவை ஒரு துருவ நட்சத்திரம் என்று நியூசிலாந்து மக்கள் மட்டுமல்ல, உலகின் தலையாக நாடுகளின் தலைவர்களே பாராட்ட தயங்கவில்லை. காலச்சக்கரத்தை ஐந்தரை ஆண்டுகள் முன்னோக்கி நகர்த்தி நிகழ்காலத்திற்கு கொண்டு வருவோம்.

2023 ஜனவரி மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை புகழ்பூத்த பிரதமர் ஜசின்டா தன் தொழிற்கட்சியின் இவ்வாண்டின் முதற்கூட்டத்தில் பேசும்போது ஒக்டோபர் மாதம் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்றும், பெப்ரவரி 7ஆம் திகதி தாம் பிரதமர் பதவியைவிட்டு வெளியேறுவதாகவும் அறிவித்து அதிர்ச்சியூட்டினார்.

கோவிட் தடுப்பு மருந்துக்கு எதிராக, இங்கு பிரிட்டன் உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் சமூக ஊடகங்களில் நடத்தப்படும் விஷமப் பிரசாரம் நியூசிலாந்து நாட்டிலும் பிரதமர் ஜசின்டாவுக்கு எதிரான வன்முறை அச்சுறுத்தல்களாக உருப்பெற்றது. கோவிட் பெருந்தொற்று காலத்தில் மரணங்களைத் தடுக்க அவர் கையாண்ட முறைகள் பெரிதும் பாராட்டப்பட்டன. எவ்வாறாயினும் தற்போது 43 வயதான ஒரு துடிதுடிப்பான மங்கை பொல்லாத அரசியலில் தீர்மானங்களை மேற்கொள்வது மிகமிகச் சிரமம் என்பதை ஜசின்டா உணர்ந்ததாக தனக்கு எதிராக குவிக்கப்பட்டுள்ள பகடைக்காய்களை உணரத் தொடங்கினார்.



விமல் சொக்கநாதன் (இங்கிலாந்து)

சில ஆண்களிடம் காணப்படும் ஆணாதிக்கப்போக்கு - கல்யாணம் செய்து பிள்ளைபெற்று வளர்ப்பதுதான் பெண்கள் வேலை. சமையற்கட்டில்தான் அவர்கள் பொழுது கழியவேண்டும் - நாட்டை நிர்வகிப்பது அல்ல! இந்த பெண் அடிமைகளை ஆக்கிரமிக்கும் ஆணாதிக்கப்போக்கு மேலைநாடு கீழைநாடு என்று பாகுபாடு இல்லாமல் கடைப்பிடிக்கப்படுகிறது.

பாரதநாட்டின் தன்னிகரற்ற தலைவியாக விளங்கியவர் பிரதமர் இந்திராகாந்தி. சீக்கியர்களின் புனித கோயிலான அமிர்தசரஸ் பொற்கோயிலை ஆக்கிரமித்த தீவிரவாத பின்தரன்வாலே போன்றவர்களை எச்சரித்த பிரதமர் இந்திரா ராணுவத்தை அனுப்பி அவர்களை அப்புறப்படுத்தப்போவதாக அறிவித்தார். ஆனால் பயங்கரவாதிகள் கேட்கவில்லை. புனிதக்கோயில் கொடியவர்களின் கூடாரமாக மாறக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டபடி, பிரதமர் இந்திராவின் ராணுவம் பொற்கோயிலுக்குள் புகுந்தது. மதவாத பின்தரன்வாலே கொல்லப்பட்டார். சீக்கிய தீவிரவாதம் அடக்கப்பட்டது. ஆனால் தலைவி இந்திராவின் தலைக்கு குறிவைக்கப்பட்டது.



1984ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் திகதி அன்னை இந்திராவின் மெய்க்காப்பாளர்களான இரு சீக்கிய காவல் வீரர்கள் (?) ஆயுதம் தாங்காத ஒரு பெண் தலைவியை பின்புறமாக சுட்டு வீழ்த்தினார்கள். சத்வந்த சிங், கேஹார் சிங் ஆகிய இரு சீக்கிய காவலர்களுக்கும் 1989 ஜனவரி 6ஆம் திகதி தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது! “அவள் ஒரு பொம்பிளை! ஏன் இந்த ஆட்டம் ஆடுகிறாள்?“ என்ற சில ஆண்களின் காழ்ப்பு மனப்பான்மை அயல்நாடான பாகிஸ்தானிலும் நிலைத்திருந்தது.

முதன்முதலாக ஒரு முஸ்லிம் நாட்டின் தலைவியாக தெரிவு செய்யப்பட்ட பெண்மணி பெனாசிர் புட்டோ. பாகிஸ்தானின் முதலாவது ஜனநாயக பிரதமர் சுல்பிக்கார் அலியின் புதல்விதான் பெனாசிர். 1990களில் இரு தடவை பாகிஸ்தானின் பிரதமராக வழிநடத்திய பெனாசிர் 2007ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி மூன்றாவது தடவையாக பிரதமர் பதவிக்கு போட்டியிட வந்த பெனாசிர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோது அவரது வண்டியை நோக்கிச்சுட்ட தற்கொலைக்குண்டுதாரி 15 வயதான பிலால் தன்னைத்தானே வெடிக்க வைத்து பெனாசிர் உட்பட அவரது ஆதரவாளர்கள் பலரைக் கொன்றான். பெண்கள் படிக்கக் கூடாது, வேலைக்குப் போகக் கூடாது என்று இன்றும் ஆப்கானிஸ்தானில் அல்லோலகல்லோலம் செய்துவரும் தலீபன் இக்காலத்தில் பாகிஸ்தான் குழு ஃ அல்குவேதா ஆகியவற்றை சேர்ந்தவன் தான் இந்த பிலால். பெனாசிரை சுட்டதும் அவர் காருக்குள் தன் மருத்துவர் மடியில் வீழ்ந்தாராம். தங்கள் கார் எந்தவித போலிஸ் பாதுகாப்பும் இல்லாமல் மருத்துவமனைக்கு சென்றதாக மருத்துவர் கூறியபோது பெனாசிர் - அல்கொய்தா கொலையில் பல சதித்திட்டங்கள் பின்னிப் பிணைந்து இருந்தன என்பது தெரியவரும்.

ஒரு பெண் என்ற காரணத்தால், அவர் மீது கடும் கோபமும் பொறாமையும் கொண்ட சில ஆண் தலைமைகள், தலைவியை கவிழ்த்து குப்புற தள்ளியது இங்கு பிரிட்டனிலும் நடந்தது உண்மையானது. இரும்புத் தலைவியான மார்கிரெட் தாச்சர் அம்மையார் 1979 முதல் 1990 வரை பிரதமராகப் பதவி வகித்தார். பிரிட்டனில் நீண்டகாலம் பதவிவகித்த ஒரு பெண் இவரே என்று பாராட்டப்பட்டவர். மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு தலைவி என்று வெளிநாட்டவர்கள் மட்டுமல்ல, பிரிட்டிஷாரே பாராட்டிய ஒருவர். ‘கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்‘ என்று வலியுறுத்திய இவர் தொழிற்சங்கவாதிகளையும்,

28 ஆம் பக்கம் பார்க்க...





Luckyfly
Lucky Fly Reisebüro
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
2023
EARLY BOOKING OFFER
QATAR
Summer holidays
899€
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
SriLankan
QATAR AIRWAYS القطرية
Emirates
طيران الخليج Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany




# இரட்டை அடையாளங்களுடன் எனது போராட்டம்!

## சுபா உமாதேவன் சுவிஸ்லாந்து

மக்களிடையே சேரவேண்டிய மதிப்புமிக்க யோசனைகள் என TEDx உலகம் முழுவதும் நிகழ்வுகள் அரங்கேறுவது வழக்கம். அழைப்பின் பேரில் மட்டுமே கலந்து கொள்ள முடியும். 20 நிமிடத்துக்குள்ளே முக்கிய கருத்துருக்களைப் பற்றி உரையாற்றுவார்கள். சுபா உமாதேவன் சென்ற ஆண்டு வழங்கிய TEDx உரையின் முழு தமிழாக்கம்.

இரட்டை அடையாளங்களுடன் எனது போராட்டம்: தமிழ் மரபின் மூலம் கற்றதும் பெற்றதும்:

எனக்கு இரண்டு வயதாக இருக்கும் போது எனது சொந்த நாடான இலங்கையை விட்டு வெளியேறினேன்.அந்த நேரத்தில் நாடு போர்ச் சூழலில் இருந்தது. நூறுஆயிரக்கணக்கான தமிழ் அகதிகளின் மத்தியில் எங்கள் குடும்பமும் இருந்தது. மே 1985 இல் நாங்கள் சுவிட்சர்லாந்தில் உள்ள பெர்னுக்கு வந்தோம்.

நான் இங்கு வந்து வளர்ந்ததிலிருந்து நான் என்னை தமிழ் மற்றும் சுவிஸ் என்று இரண்டு மொழியையும் சேர்ந்தவள் என்று கருதிக் கொள்கிறேன். ஸ்விட்சர்லாந்து தான் எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து எனக்கு அறிந்த தாயகம். ஆனால் அதை எப்போதும் என் சொந்த தாயகம் போல நினைத்துக் கொள்ள முடியுமா? இல்லை, என்னால் உணர முடியவில்லை. நான் உண்மையில் இரட்டை அடையாளத்துடன் வளர்ந்தேன். அதிலேயே போராடிக் கொண்டிருக்கிறேன். என் பெற்றோர் போரில் இருந்து தப்பி ஓடிய போது அவர்கள் பாதுகாப்பாக ஒரு புதிய வாழ்க்கையை உருவாக்க வேண்டும் என்று நினைத்தனர், நம்பினர். நான் என்,சகோதரர் என எங்கள் இருவருக்குமான வாழும் வாய்ப்பை முற்றிலும் சுவிட்சர்லாந்து எங்களுக்கு வழங்கியது. இந்த நாடு எனது விழுமியங்களை வடிவமைத்தது. எனக்கான கலாச்சாரம், நேரம் தவறாமை மீதுள்ள தீவிரத்தையும் அளித்தது. இருந்தும் ஓர் அகதியாக வளர்ந்தேன்.

மாற்றும் தலைமை என்றால் வழிநடத்துதல் என்று பொருள்.நிச்சயமற்ற தன்மைகளைப் புரிந்து கொண்டு சிக்கலின் போது அதன் பொருள் உணர்ந்து விடாமுயற்சியுடன் கற்றுக் கொள்வது எப்படி என்பதை இங்கேதான் தெரிந்து கொண்டேன்.இதுஎனக்கு இங்கே கற்பிக்கப்பட்ட ஒரு பெருமதிப்புள்ள பாடமாகும். ஒரு மாற்றத்தை விரும்பும் தலைமைப் பண்புள்ளவராக இருப்பது எப்படி என்பதை எனது பயணங்களில் மூலம் கற்றுக் கொண்டேன்.அதன் வழியாக எனது சுய அடையாளத்தை கண்டறிகிறேன். நமக்குத் தேவையான தன்மைகளை மாற்றிக் கொள்ளாமல் உண்மையாக இருங்கள். அப்போது நாம் யார் என்பதை அறிய ஊக்கமளிக்கும். அதனால்தான் தலைமைப் பொறுப்பில் நாம் நினைத்ததை விட நேர்நிலையான மாற்றம் சாத்தியமாக இருந்தது. உண்மையில் உங்கள் சொந்த அடையாளத்தை விடாமல் பற்றித் தழுவிக் கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் ஆற்றலைத் திறந்து கொள்வீர்கள். ஒருவேளை அது இல்லை என்று நீங்கள் கற்பனை செய்யலாம். அது எப்போதும் எளிதானதல்ல. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு என்றால் என்னால் இங்கு நின்று பேச முடிந்திருக்காது.



இங்கே நின்று பேச முடிந்தது உங்களைத் தழுவியதன் மூலமாகத் தான். என் அடையாளத்தைத் தழுவி நிற்கும் என் வேர்கள் என் பாரம்பரியம். அது உண்மையில் என்னை ஆழமான முறையில் பாதித்தது. அதுவே இன்று நான் தலைமைப் பொறுப்பில் இருக்க உதவியது. இந்த அறிவுதான் அகதிப் பெண் நிலையிலிருந்து போராடி எழுந்து, பன்னாட்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக என்னை உயர்த்தி அடையாளம் காட்டியது என்று சொல்வேன். சிறு வயதிலிருந்தே இருவழிப்பாதை பயணத்தில் வளர்ந்தேன். இந்த வழிசெலுத்தல் எனக்குப் புதிதானது.எனக்கு வீட்டில் மிகவும் வித்தியாசமான உலகங்கள் இருந்தன. நாங்கள் வீட்டில் தமிழ் பேசினோம். பள்ளியில், நான் ஜெர்மன் கற்றுக் கொண்டேன். வீட்டில், நாங்கள் சாதம் மற்றும் கறி சாப்பிட்டோம் பள்ளியில், நான் சீஸ் மற்றும் தொத்திறைச்சிகளை விரும்பினேன்.

08 ஆம் பக்கம் பார்க்க...





# இரட்டை அடையாளங்களுடன் எனது போராட்டம்!

## சுபா உமாதேவன் சுவிஸ்லாந்து

இன்று நான் என் சுவிஸ் நண்பர்கள் அதிகமாக சாதம் மற்றும் கறி சாப்பிடுகிறார்கள்.

ஆனால் வீட்டில் ஏ.ஆர.ரஹ்மானின் இசையைக் கேட்போம். பள்ளியில் நான் ஸ்பைஸ் கேர்ள்ஸி டம் ஜாம் செய்து பழகினேன். இரட்டை வாழ்க்கை போல் இது எனக்குத் தோன்றியது என்றாலும் நான் அப்படித்தான் இருந்தேன். உண்மையில் இரண்டு கலாச்சாரங்களுடன், நான் போராடிக் கொண்டிருந்தேன்.எனக்கான அடையாளம் எது என்கிற அடையாள நெருக்கடியுடன் போராடிக் கொண்டிருந்தேன். ஆரம்பத்தில் நான் தமிழனாக இருக்க விரும்பமுடியாத,இந்த அடையாளத்துடன் நான் போராடினேன்.அதைத் தழுவ முடியவில்லை. இங்கே புடவை அணிந்திருந்ததைப் பார்த்ததும் எனக்கு வெட்கமாக இருந்தது.எனவே அப்படி நான் இருக்க விரும்பவில்லை. என் வகுப்பில் இருந்த ஒரே பழுப்பு நிறப் பெண் நான் என்று உணர்ந்தேன். என் தோலின் நிறம் பற்றிக் கேலி பேசப்பட்டது.அப்போது நான் ஒரு பாதுகாப்பற்ற மனநிலையில் இருந்தேன். பெரிய கண்கள் நீண்ட கறுப்பு முடி பெரும்பாலும் கவனித்தலுக்கும் கேலிக்கும் இலக்காகவும் இருந் தன. இனவாத கருத்துக்கள் ஒலித்தன. என் ஆசி ரியர்களால் என் பெயரைச் சரியாக உச்சரிக்க முடியவில்லை. என் அடையாளம் என்னை மிகவும் தாழ்வுணர்ச்சியுடன் உணர வைத்தது.

இந்த நேரத்தில் என் பெற்றோர் உருவாக்கிய தமி ழ்க் கலாச்சாரத்தில் நான் அடித்தளமிடப்பட்டேன். நம் பாரம்பரியத்தில் இருந்து நான் விலகி விடு வேனோ என்று அவர்கள் கவலைப்பட்டார்கள். அத னால் என் தாய்மொழியான தமிழைக் கற்றுக் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் என்னை பரத நாட்டியம் கற்றுக்கொள்ள ஊக்குவித்தார்கள். எனது தலைமைத்துவ திறன்கள் ஒரு நடன ஆசி ரியராகவே எனக்கு கிடைத்தது. பரதநாட்டியம் என்கிற ஒன்று என் கற்றலுக்கு உண்மையில் ஆதாரமாக இருந்தது. அது எனக்கு உண்மையில் தன்னம்பிக்கை கொடுத்தது. எனது தமிழ் அடை யாளத்தைத் தழுவி, இன்று நான் உண்மையில் உங்கள் முன்னால் நிற்கும்போது நிறைய நான் கற்றுக்கொண்டேன். எதிர்பார்க்கக்கூடியவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள். உண்மையில் சமூகத்தை உருவாக்க உங்களுக்குத் தெரியும். நம்மைப் போல் பலதரப்பட்ட தலைவர்கள் தேவை. சவால்கள் நம க்கு எல்லாரிடமிருந்தும் வரும். நமக்கு இப்போது எவ்வாறான தலைவர்கள் தேவை?

இன்று நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெவ்வேறு குரல்கள் தேவை. நமது சொந்தக் கண்ணோட்டங்கள் சவாலாக எதிர்ப்பு தேவை. எதிர் காலத்தில் வழிநடத்த புதிய திறன்கள் வேண்டும். நான் என் முதுகலை முடித்தவுடன் உலகளாவிய வளர்ச்சியில் பங்கெடுக்கும் அமைப்புகளில் பணியாற்றும் பாக்கியமும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தன.ஆப்பிரிக்காவின் சஹாரா தென் அமெரிக்கா பகுதிகளில் பணியாற்றிய போது அம்மக்களின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே இது உலகின் பன்முகத்தன்மையைக் காட்டுகிறது. இந்த மாற்றங்கள் எப்படி சாத்தியப்பட்டன? இவற்றை உணர்வுபூர்வமாக வெளிப்படையாகப் பகிரும் தைரியம் எனக்கு கிடைத்தது எப்படி? நான் உண்மையான ஆர்வத்தை உணர்ந்ததால்தான். அதனால் நான் மனம் திறக்க முடிவு செய் தேன். அம்மக்கள் நான் யார் என்று அறிவதில் ஆர்வமாக இருந்தார்கள். இங்கே பகிர்ந்து கொண்ட கதை மூலம் நான் இரண்டு வெவ்வேறு கலாச்சாரங்களை இணைத்து ள்ளேன். மாலி, சியரா லியோன் மற்றும் கென்யா போன்ற பகுதிக ளில் மக்களுடன் உரையாடலில் இருந்தேன் என்றாலும் நான் தனித் துவத்துடன் இருந்தேன் தனியளா கவும் இருந்தேன்.

நான் இறுதியாக சுவிஸ் தமி ழரானேன். இன்று மக்கள் அடிக்கடி என்னிடம் எப்படி நீங்கள் நீங்களாக இருக்கிறீர்கள் என்று கேட்பார்கள். எப்போதும் நீயாக இரு என்கிற பதில் மிகவும் எளிமையானது. ஏனெனில் நான் யார், எங்கிருந்து வந்தேன் என்பதை அறிந்து கொண்டேன்



நான் அதில் பெருமைப்படுகிறேன். என் குழந்தை பருவத்திலேயே மொழிச் சிக்கலை உணர்ந் தேன். தமிழ் ஜெர்மன் என்று மொழி பெயர் த்தது என் பெற்றோர்கள் மற்றும் அவர்களின் நண்பர்கள். அது ஒன்பது வயதில் தொடங்கி யது, அது மிகவும் சவாலான அனுபவமாக இருந்தது. ஏனெ ன்றால் நான் கடின என் வயதுக்கு மீறிய மொழியை மொழிபெயர்க்க வேண்டியிருந்தது. அது என் வயதி ற்கு அப்பாற்பட்டது. ஆனால் நான் மீண்டும் நினைக்கும் போது அது எனக்குக் கொடு த்த அனுபவங்களையும் அதற்காக நான் பயன்படு த்திய குறிப்பிடத்தக்க திறன்களையும் நினைக்கும் போது இன்று சற்றே வளர்ந்த வயதில் அது அப் போது எனக்கு உதவியதாகவே தோன்றியது.

நாம் சிறந்த முறையில் வளர்க்கக்கூடிய ஒரு வழி விடாமுயற்சி. கற்றல், மேலும் ஊக்குவித்தலில்தான் உண்மையில்

தலைமை தாங்கும் தன்மை உள்ளது. எப்படி இருக்க வேண்டும் என்பதை இளைஞர்களுக்கு கற்றுத்தர முடியும். தலைவர்கள் மற்றும் நாம் அவர்களை ஊக்குவிக்க முடியும். ஆர்வத்துடன் கூட்டு மனப்பான்மை, நேர்நிலை சிந்தனை,படைப் புத் திறன்களை இன்று கல்வியில் அவசியம் கற்க வேண்டும். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதில் பெரிய பங்கு வகிக்கிறார்கள். எனது பல ஆசிரியர்களின் பேச்சைக் கேட்டிருந்தால் நான் இன்று இங்கு இருந்திருக்கமாட்டேன். அதே நேரத் தில் என் திறமையில் நம்பிக்கை வைத்த ஆசி ரியர்கள், என்னை வழிநடத்தியவர்கள் என்னை ஊக்கப்படுத்தவும் செய்தனர். இன்று நான் vuca வழிசெலுத்துவதில் சிறந்து விளங்குகிறேன். சங்கடம், என் பலம், அசௌகரியம் போன்றவையும் என் வேலையின் முக்கிய பகுதிகள்தான்.

நான் கேள்விகள் கேட்கிறேன் நான் புரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளேன் நான் கற்றுக்கொள் ளவும் செய்கிறேன். நான் மிகவும் விரும்பியது இணைப்புதான்.அனைத்து தரப்பு மக்களும். எனது சக ஊழியருடன் இணைவதை நான் விரும்பு கிறேன். நான் இனி வெட்கப்படவில்லை, நான் நேசிக்கிறேன், இன்று சேலை அணிவதில் பெருமை படுகிறேன். நான் என் பாரம்பரியத்துக்காகப் பெருமைப்படுகிறேன். நான் எங்கு வளர்ந்தேன், அதனால் பெருமை அடைகிறேன். நான் சுவிஸ் தமிழ். 15 வயது சுபாவிற்கு இதெல்லாம் தெரிந்திரு க்க வேண்டும் என்று அந்த உறுதியைப் பெற்றி ருக்க முடியும்?

நான் பலவீனமாக பார்த்த அனைத்தும் இறுதி யில் வலிமையானதாக மாறும்.உண்மையில்

**சுபா உமாதேவன் உரையின் தமிழாக்கம்**
**கலாநிதி கல்லாறு சதீஷ்**

அதுவே அவர்களை செழிக்கச் செய்கிறது VUCA என்பது நிலையற்ற தன்மை,நிச்சயமற்ற தன்மை,சிக் கலான தன்மை மற்றும் தெளிவின்மையைக் குறிக்கிறது. இச்சூழலில்.சுருக்கமாக,சிலவற்றைக் கூறி விடைபெற விரும்புகிறேன்.முதலில் இரண்டு எண்ணங்களுடன், தழுவி உங்கள் அடையாள த்தைக் கண்டறியுங்கள். உங்கள் உண்மையான அடையாளம் உங்களுக்குத் தைரியத்தை அளி க்கும். இரண்டாவதாக, உண்மையாக ஆர்வமாக இருங்கள். சவாலான விதிமுறைகள் உங்களை உருவாக்கத் தூண்டுகிறது. தடைகளை உடைத்து சமூகத்தை உருவாக்குங்கள். இது தான் இன்று உலகிற்குத் தேவையான மாற்றம். மிக்க நன்றி.






கலாநூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# பெண் என்பவள் அழகென்ற விம்பத்தை தாண்டி இச்சமூகத்தை அழகாக மாற்றுபவள்

அகத்தேயும், புறத்தேயும் விடுதலை கொண்டு, வெண் வானின் தங்கப் பட்சிகளாய், வெற்றி நிலவைக் கைக் கொண்டு வாழத் தெளிந்தோர் பெண்கள். பெண்ணினினிமையைக் கொண்டாடும் ஆணினம் இவ்வையத்துக்குந்த வரம்.

பெண்மையைப் போற்றும் ஆண்மையைக் காட்டினின்று ஆண்களுக்குப் பெருமை சேர்த்தவர் பாரதி.

> பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
> பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!

ஆண்கள் எம்மை அவர்களுக்கு நிகராக ஏற்றுக்கொள்வார்கள் எனில், நம் தாய் திருநாட்டை மீட்டிட ஆண்களோடு சேர்ந்து பெண்கள் நாமும் உழைப்போம் என்று தமிழ் பெண்கள் தம் வீரம் காட்டுகிறார்.

> குறைவி லாது முழுநிகர் நம்மைக்
> கொள்வ ராண்க ளெனிலவ ரோடும்
> சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
> திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம்

உலக வாழ்க்கையின் நுட்பங்களில் தேர்ச்சி பெற்று, பல வகையான நூல்களைக் கற்று, நமது நாட்டில் உள்ள விடயங்களை அறிவதோடு மட்டும் நின்று விடாது, உலக நாடுகளுக்கு சென்று, தேடிய நுட்பங்களை நம் தாய் நாட்டுக்கு கொண்டு வந்து, நம் நாடு மேன்மை பெற வழி சமைக்க வேண்டும். பழைய மூட வழக்கங்களை இல்லாது செய்து,புதிய சாஸ்திரங்களையும், சௌகரியங்களையும் படைக்க வேண்டும்.

> உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்,
> ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
> இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
> யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
> திலக வாணுத லார்நங்கள் பாரத
> தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்

இந்த உலகத்தை மாற்றக் கூடிய சக்தியும். இவ்வையத்தில் வாழ்வோரை தேவர்களாக மாற்றாக கூடிய சக்தியும் பெண்களிடம் உண்டு. பட்டங்கள் ஆள்வோம். சட்டங்கள் செய்வோம். இவ்வாறு நாட்டு நலம் பேணுவது மட்டுமல்ல. வீட்டு நலமும் மிகவும் சிறப்பாக பேணுவோம். வேதமும் படைப்போம். சாதமும் படைப்போம்.

> அறிவு கொண்ட மனித வுயிர்களை
> அடிமையாக்க முயல்பவர் பித்தராம்
>
> விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
> வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்.
> அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்

> அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
> உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்.
>
> மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
> மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
> வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார்,அதை
> வெட்டி விட்டோ மென்று கும்மியடி!
>
> வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
> வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.
>
> கடமை செய்வீர்,நந்தேசத்து வீரக்
> காரிகைக் கணத்தீர்,துணி வுற்றே

என அன்றைய பெண்களிடம் பலவகையிலும், பலவாறும் வீரத்தை விளைக்க பாடுபட்டுப் பாடினார். அதன் விழைவாக இன்று நம் பெண்கள் முன்னையதைக் காட்டிலும் முடிந்தளவு அவர்களின் சுதந்திரத்தை அனுபவிக்கும் நிலையினைப் பெற்றுள்ளனர்.

இன்று பொதுவாழ்வு,உத்தியோகத் துறை போன்றவற்றில் ஈடுபட்டிருக்கும் பெண்களும், இனி,எதிர்வரும் காலத்தில் உலகின் பல பணிகளிலும் தங்களைப் பிணைத்துக் கொண்டு சாதனை படைக்க கவிருக்கும் இளம் பெண் தலைமுறையினரும், ஆண்களுக்குச் சமமான முறையில் பல துறைகளிலு“சமத்துவம்“ பெறவேண்டும் என்று.ஐ.நா.சபை அழுத்திச் சொல்கிறது. 19ம் நூற்றாண்டின் கடைசி கால கட்டத்திருந்து உலகில் பல அரசியல்,பொருளாதார, சமூகவியல் மாற்றங்கள் நடந்து கொண்டிருந்தன.அந்த மாற்றங்களில் பெண்களின் பங்கும் கணிசமாகவிருந்தன.

பெண்களின் நலன் மீது அதிக அக்கறை காட்டிய மனிதராகவும், பெண்களை அடிமைப்படுத்திய காலத்தில் அவர்களைப் போற்றிப்பாடிய புனிதனாகவும் பாரதி திகழ்ந்தார் என்பது மறுப்பதற்கில்லை.

> காத லொருவனைக் கைப்பிடித்தே,அவன்
> காரியம் யாவினும் கைகொடுத்து,
> மாதரைச் சேர்க்கும்
> மனைவியின் வார்த்தைகள்
> காதல் மனைவியே சக்தி கண்டீர்
> வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
>
> ‘போற்றி தாய்’ என்று தாளங்கள் கொட்டடா!
> ‘போற்றி தாய்’என்று பொற்குழ லூதடா!



பெண்களின் அனைத்துப் பருவத்திற்கும் கவிதை தந்தார். சிறுவர்களுக்கு துணிந்து, தெளிந்து நிற்கும் அறிவினை பாப்பா பாட்டிலேயே அறிமுகப்படுத்தி விடுகிறார்.

> பாதகஞ் செய்பவரைக் கண்டால் – நாம்
> பயங்கொள்ள லாகாது பாப்பா!
> மோதி மிதித்துவிடு பாப்பா! – அவர்
> முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

.ஒன்றைச் செய்து வெற்றிபெற வேண்டும் என்ற பெண்கள் உறுதியுடன் நினைத்தால் யாரும் அவர்களைத் தடுக்க முடியாது“ என்கிறார். நிதிமா பாண்டே

பெண் என்பவள் யார்? மேன்மையானவள், அழகானவள், அடக்கமானவள் என்றெல்லாம் கவிஞர்கள் வர்ணித்து கொள்வார்கள். ஆனால் பெண் என்பவள் அழகென்ற விம்பத்தை தாண்டி இச்சமூகத்தை அழகாக மாற்றுபவள்.

தன்னையும் தன்னைச் சூழ்ந்தோராய்யும் அழகாக்க தலைமைத்துவம் என்னும் அணிகலனை கொடுத்தே இப் பூமிக்கு அனுப்பி வைக்கிறான் இறைவன்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் இம்மண் தந்த ஜனன பரிசு தலைமைத்துவம். பெண்கள் இயல்பிலேயே தலைமைத்துவம் வாய்ந்தவர்களாகத் தான் பிறக்கிறார்கள்.

“மங்கையராய் பிறந்திடவே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்” என்று பாடுகிறார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அந்தளவிற்கு மனித வாழ்க்கையில் பெண்களின் முக்கியத்துவம் அளப்பரியது.

பாரதியைத் தழுவி,பார்போற்றும் பெண்களென பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் அனைத்துப் பெண்களின் இன்பத்திலும் உண்மை ஒளியோடு உறைந்து கொண்டிருக்கிறார் பாரதி. அவ்வெளிச்சத்தின் விசாலத்தில் விண்ணையும் சாடும் வீர மங்கையராய் ஆற்ற வேண்டிய உலகப் பணிகள் பலவுள என்றுணர்ந்த பெண்களைப் போற்றி பணிந்து சர்வதேச மகளிர் தின வாழ்த்துகைளை தெரிவித்து நிறைகிறேன்.



# என்னை உன்னிடம் தந்திருக்கின்றேன்



ஸ்டீவ் மெர்குறி
கண்டிருந்தால்
உலகப் புகழ்பெற்ற
புகைப்படமாய்
எங்கும்
சட்டமிடப்பட்டிருக்கும்

பாரதியிடம் தந்திருந்தால்
காலங்கள் கடந்ததொரு
அகப்பொருளாய்
கவிதையெனக் கலந்திருக்கும்

இரவிவர்மாவிடம்
கொடுத்திருந்தால்
கடவுளர்களோடு
ஒரு கடவுளாய்
பூஜிக்கப்பட்டும்
இருக்கக்கூடும்

பிக்காசோவிடம் தந்திருந்தால்
அழகிய முக்கோணச் சில்லுகளாய்
ஓவிய அந்தஸ்துப்
பெற்றிருக்கும்
என் முகமும்...

இப்சனிடம் தந்திருந்தால்
முன்மாதிரிப் பெயரொன்றைப்
பெற்றிருக்கக்கூடும்

என்னை
உன்னிடம் தந்திருக்கிறேன்.

**கவிதா லட்சுமி நோர்வே**




நானும் அவளும்
நீண்டநாட்கள் பழக்கம்

ஹாய்! ஹலோ! என்றே
ஆரம்பித்த எமது சிநேகம்
கவிதை, கடவுள்,
காப்பரேட் திட்டங்கள்,
வண்ணத்துப்பூச்சிகள்,
வானவில்,
வீட்டுச் செலவு,
விலைவாசி,
பாலியல் சபலங்கள்
'வயாக்ரா'வின்
பின்விளைவுகள்,
ஓசோன் படையில்
விழுந்த ஓட்டை
வடகொரியா மீதான
அமெரிக்காவின் காட்டம் என்று
நீண்டுகொண்டு செல்கிறது.

இப்போது
நேரில் சந்திப்பதாய்
முடிவெடுத்துக் கொண்டதால்
தொடரூந்து நிலையத்தில்
எங்கள்
தொடக்கச் சந்திப்பு
தொடக்கூடிய
தூரத்தில்தான்
இருவரும்....

இடையில்
கடற்பஞ்சுக்
கலங்களினாலான
நட்பு இருக்கிறது.

மீண்டும் சந்திப்பதாய்
முடிவெடுத்தபோது

எதிரெதிராய் செல்லும்
தொடரூந்தின்
ஆரம்பச் சமிக்ஞை
ஒலிக்கத் தொடங்கியிருந்தது.

எதிரெதிராய்ச்
செல்லத்தொடங்கிய
தொடரூந்துகளில்
நாங்கள்
எங்கள் நினைவுகள்
தொடரூந்துகளிலிருந்து
இறங்கி
அந்தத் தண்டவாளங்
களிலேயே
வந்த திசைவழியே
விரையத் தொடங்கியிருந்தது

பயணித்த நினைவுகள்
பக்கத்தில வந்துவிட்டன
பக்கத்தில் என்றால்...

கூப்பிடு தூரத்திலிருந்து
குசலம் விசாரிக்கும்
தூரம் வரைக்கும்.

கிட்டவாக...
இன்னும் கிட்டவாக நெருங்கி
கட்டிக் கொள்வதற்கு
கைகளை
விரித்துக்கொண்டாலும்

இடையில்
கடற்பஞ்சுக்
கலங்களினாலான
நட்பு இருக்கிறது.

**வடிவேல் வேலழகையன்**

## 22 வது ஆண்டு நினைவுப் பூக்கள்!

**செல்வி கஜனி தேவராஜா**
(பிறேமன், ஜெர்மனி)
மலர்வு:12.05.1988
பிரிவு 16.03.2001



அன்பின் திருவுருவே! அருமைக் கஜனியம்மா!
சொல்லாமல் நீ பிரிந்த துயர் இன்னும் நீங்கவில்லை.
ஆண்டுகள் இருபத்தி இரண்டு ஆனதம்மா இப்போது!
அருமைக் கஜனி!
உந்தன் அன்புமுகம் எங்களுக்குள்
நிலையாகி உந்தன் நினைவுகளை வளர்க்கிறது!
என்றும் பிரியாத எம தருமைக் கண்மணியே!
சக்திபதம் நீயடைந்து சாந்தியுறும் நாளிதனில்
கண்ணீரை உந்தனுக்குக் காணிக்கையாக்குகிறோம்!
அன்பே நீ அமைதி பெறு ஆதிசக்தி நிழலினிலே!

என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா, அப்பா, அக்கா, அத்தான்
எஸ்.தேவராஜா (இங்கிலாந்து)





# பெண் தொழில் முனைவோர் அதிகம் உருவாவதில்லையா?

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆண்களின் பங்கை போலவே பெண்களின் பங்கும் முக்கியமானதாக இருக்கின்ற நிலையில் நம் பெண் தொழில் முனைவோரது நிலை இன்றுவரையில் எத்தகைய நிலையில் உள்ளது? பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்பு என்பது இன்றைக்கு மிகவும் பரந்து விரிந்துள்ளது என்பதே நிஜம். பதினைந்து வருடங்களுக்கு முன்புவரைக்கூட பெண்களுக்கான சுய தொழில் என்றால் அனேகரது பொதுப்புத்தியிலும் வந்து நிற்பதென்னவோ மிளகாய்க் கன்றுகளை நடுவது உற்பட சில வகையான சேனைப்பயிர்ச் செய்கை, ஆடு, மாடு, கோழி வளர்த்தல், பீடி சுற்றுதல், ஊறுகாய், பப்படம், சமையலுக்கான மசாலா பொடி போன்றவற்றை தயாரித்தல், தையல் வேலை செய்தல் உள்ளிட்டவையே. இதைத்தான் சுய தொழிலாக பெருமையாக கருதுவார்கள்.இன்றைய நிலைமையோ முற்றிலும் வேறு. பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள், பெரும் அளவில் விரிவடைந்துள்ளன என்றால் மிகையாகாது. ஆனால் பெண் தொழில் முனைவோருக்கான இந்த பயணமானது அத்தனை சுலபமானதல்ல என்பதே யதார்த்தம்.

வரலாறு நெடுகிலும் பெண்கள் தொழில் தொடங்குவதற்கான சட்டங்கள் மிகக் கடுமையாகவே இருந்துள்ளன. குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில்கூடப் பெண்கள் தொழில் தொடங்க அவர்களது கணவர்களின் கையொப்பம் கட்டாயமாக்கப்பட்டிருந்தது. இரண்டாம் உலகப்போரில் பெரும்பாலான ஆண்கள் ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டமையினால் விவாகரத்துகளும் பொருளாதார நெருக்கடியும் பெண்களுக்குச் சவாலாக இருந்தது. இது போன்ற நிலையில் பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய சூழலில், சில பெண்கள் சுயமாகத் தொழில் தொடங்க ஆரம்பித்தனர். முதலில் சிறுசிறு தொழிலாகச் செய்த பல பெண்கள் இன்று தமக்கான தொழில்துறை சாம்ராஜ்ஜியங்களையே உருவாக்கிவிட்டனர் என்று கூறிக்கொண்டாலும்,உண்மையில் இன்று உலக அளவில் எத்தனை பெண் தொழிலதிபர்கள் இருக்கின்றார்கள் என்கிற கேள்விக்கு விரல் விட்டு எண்ணிவிடலாம் பதிலை!



ஆம்,ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண் தொழிலதிபர்களும் தொழில் முனைவோர்களும் மிகமிக குறைவான அளவிலேயே தற்போதும் இருக்கின்றோம். இதற்கான காரணங்கள் என்ன, எது எமக்குத் தடையாக உள்ளது, என்ன மாதிரியான சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பார்த்தால், முதலில் வருவது பெண்களின் குடும்பப் பொறுப்புகள் தாம். காலையில் எழுந்தது முதல் இரவு நித்திரைக்குச் செல்லும்வரையில் வீட்டு வேலை குழந்தைகளை பராமரித்தல் எனும் வட்டத்தினுள் சிக்கிக் கொள்ளும் அநேக பெண்களால் தாம் நினைத்தாலும்கூட அந்த வட்டத்தினை விட்டு அவ்வளவு எளிதாக வெளியேற முடிவதில்லை.குடும்பத்தைவிட்டு தொழிலா முக்கியம் எனும் மனோபாவம் நம்மை அறியாமலேயே நமக்குள் திணித்துவிடப்பட்டிருப்பதனால்,அவ்வளவு சீக்கிரத்தில் நம்மால் துணிந்து செயற்பட முடிவதில்லை போலும். அதிலும் நம் சமூகமும் இந்த எண்ணத்தில் எண்ணெய் ஊற்றி தீயை வளர்க்கும் பொறுப்பினைக் கொண்டதல்லவா?

மேலும்,படிப்பிற்கும் திருமணத்திற்கும் இடையில் இருக்கும் கால அவகாசம் ஆண்களைப் போல பெண்களுக்குக் கிடைப்பதில்லை. படிப்பை முடித்த கையோடு பெரும்பாலான பெண்கள் ஏதாவது ஒரு நிறுவனத்தில் பணிபுரிய ஆரம்பிப்பதற்கு காரணமே கல்யாணத்திற்கு காசு சேர்க்க வேண்டும் எனும் குடும்பத்தாரின் உந்துதலே. மாறாக கையில் கொஞ்சம் காசு சேர்த்து சொந்தமாக ஒரு தொழிலையோ அல்லது ஒரு நிறுவனத்தை நிறுவ வேண்டும் என்றோ எண்ணுவதில்லை. வேலைக்குச் சேர்ந்த ஓரிரு ஆண்டுகளில் திருமணம், அதன் பிறகு குழந்தை என்று அடுத்தடுத்து பொறுப்புகளில் சோர்வாகி, தான் எதை நோக்கிச் சாதிக்க நினைத்தோம் என்பதையே பல பெண்கள் மறந்து விடுகின்றனர் என்பதுதான் யதார்த்தம்.

அதிலும் பெண்களுக்கிருக்கும் இன்னொரு மனத்தடங்கள்தான் பெரிய அளவிளான முதலீடுகளில் ஈடுபடுவதை விரும்பாமை. பெரிய முதலீட்டு வணிகத்தில் பொருளாதாரத்தில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ள அநேகமான பெண்கள் விரும்புவதில்லை. இதனாலயே குறைந்த முதலீட்டில் நடக்கும் தொழில்களோடு பல பெண்கள் திருப்தி அடைந்துவிடுகின்றனர். மேலும் பெரும்பாலான பெண்களுக்கு தம்முடைய பெயரில் சொத்துகள் வாங்கப்படு வதில்லை. இதனால் தொழில் தொடங்க வங்கியில் கடன் பெறுவதற்கான உத்தரவாதம் என்பதும் கிடைக்காமல் போவதும் பெரிய முதலீட்டு வணிகங்களில் ஈடுபடாமைக்கு காரணம்.

ஒவ்வொரு பெண்ணின் கையிலும் பொருளாதார சுதந்திரம் இருந்தாலே பெண் விடுதலை என்பது உறுதியானதாகிவிடும்.




பிரியா இராமநாதன்
(இலங்கை)

ஆக எல்லாப் பெண்களுக்கும் அவசியம் தேவைப்படுகிற ஒன்று பொருளாதார சுதந்திரம். துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான பெண்கள், தமது எல்லாத் தேவைகளுக்காகவும் ஆண்களைச் சார்ந்தே வாழ வேண்டியிருக்கிறது. “படிச்சிருந்தாலாவது வேலைக்குப் போகலாம்‘ எனப் படிக்காத பெண்களும்,

28 ஆம் பக்கம் பார்க்க...






மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)


NiMa
வழங்கும்
முதல் முறையாக ஐரோப்பாவில்
பல கலைஞர்களுடன்
யுவன் சங்கர் ராஜாவின்
மாபெரும் இசை நிகழ்ச்சி
HIGH ON
YUVAN
காணத் தவறாதீர்கள்
NiMa
N3
Download on the App Store
GET IT ON Google Play
GET YOUR TICKETS
www.highonu1.com
தொடர்புகளுக்கு +49 15140354527
agilam
Phonecare
KARIKAALA
wappsta.
கவித்துளி
creative
U1
Rudolf Weber ARENA
N3


AJ
ENTERTAINMENT
PROUDLY PRESENTS
Rudolf Weber
ARENA
இளையராஜா
40
LIVE IN GERMANY (NRW)
RESERVE YOUR TICKETS NOW! - 015145459696 (WhatsApp or SMS)
01.07.2023
tamil.de
portal • lifestyle • entertainment
EPIC MONKEYS





ரஞ்ஜனி சுப்ரமணியம் (இலங்கை)

# பாலின சமத்துவமும் இலங்கையும்


## ஆண் குழந்தைகள் பிறக்க வேண்டும் என விரும்பும் மனநிலை முற்றாக மறையவில்லை.

"எண்ணிமம் எல்லோருக்கும்: புத்தாக்கமும் தொழில்நுட்பமும் பாலின சமத்துவத்தினை நோக்கி "
"DigitALL: Innovation and technology for gender equality".

**2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேசப் பெண்கள் தினத்திற்கான கருப்பொருள் இதுவாகும்.**

ஆணாதிக்கம் அதிகம் உள்ள விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் ஆகிய துறைகளில் பெண்கள் தொடர்ந்தும் தமது சமத்துவத்திற்காக போராட வேண்டியுள்ள நிலையிலேயே இந்தக் கருப்பொருள் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த எண்ணிமயுகத்தில் வளர்ந்து வரும் புத்தாக்கங்கள் மற்றும் தொழில் நுட்ப துறைகளில் பாலின சமத்துவத்தினையும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்தும் விதத்தில் இக்கருப்பொருள் அமைந்துள்ளது.

பாலின சமத்துவமானது மிக முக்கியமான மனித உரிமைகளில் ஒன்றாகும். வன்முறைகளற்ற ஒன்றிணைந்த சமூக வாழ்வுக்கும் மிக அவசியமானது. சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக பெண்கள் முன்னேற்றம் அடைவதை இலக்காக முன்னிறுத்தி, ஆண்டிற்கு ஒருமுறை மார்ச் எட்டாம் திகதியன்று 'சர்வதேச பெண்கள் தினம்' கொண்டாடப் படுகிறது.வெவ்வேறு தொனிப் பொருள்களால் சிறப்பிக்கவும் படுகின்றது. இத்தினத்தின் தோற்றத்துக்குப் பின்னே ஒரு போராட்ட வரலாறும் உண்டு. வேலை நேரத்தை குறைக்கவும், கூலியை உயர்த்தவும் வலியுறுத்தி, வாக்களிக்கும் உரிமை கோரி 15,000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 1908-ம் ஆண்டு மார்ச் 8-ம் தேதி ஒரு பேரணியை நடத்தினர். அமெரிக்க சோஷியலிஸ்ட் கட்சி,அடுத்த




ஆண்டு இந்த நாளை தேசிய பெண்கள் தினமாக அறிவித்தது. எனினும் 1975-ம் ஆண்டில்தான் ஐ.நா.மார்ச் 8-ஐ சர்வதேசப் பெண்கள் தினமாக முறைப்படி அறிவித்துக் கொண்டாடத் தொடங்கியது.

அண்மைய தரவுகளின்படி உலகளாவிய ரீதியில் பாலின சமத்துவத்தில் ஐஸ்லாந்து, பின்லாந்து, நார்வே, நியூசிலாந்து, சுவீடன்,ஆகிய நாடுகள் முன்னிலையிலும் ஆப்கானிஸ்தான்,யேமன்,ஈராக்,பாகிஸ்தான்,சிரியா,ஆகியன கடைநிலையிலும் இலங்கை மத்திமநிலையிலும் தெற்காசியாவில் பங்களாதேஷ் முதன்மை நிலையிலும் உள்ளன.

கல்வி தொழில்வாய்ப்பு வேதனம் ஆகியவற்றில் சமவாய்ப்பின்மை,வீட்டிலும் வேலைத்தளத்திலும் எதிர் கொள்ளக் கூடிய வன்முறைகளுக்கும் பாலியல் அத்துமீறல்களுக்கும் எதிராக சட்டரீதியில் போதுமான பாதுகாப்பின்மை, தனது உடல் பற்றிய தன்னதிகாரம் இல்லாமை, வாழ்க்கைத் திட்டமிடலில் போதிய அதிகாரம் இல்லாமை, அரசியலில் சமவாய்ப்புகள் இல்லாமை, பாரபட்சமான சமூகப்பார்வை, இன நிறப்பாகுபாடு, மருத்துவ வசதிகளில் சமமின்மை ஆகியன உலகளாவிய ரீதியில் பாலின சமத்துவமின்மையின் முக்கிய பிரச்சனைகளாக இனம் காணப்படுகின்றன.

இலங்கையில் பாலின சமத்துவத்தின் விகிதாசாரங்களை நோக்கினால்,கல்வி மருத்துவ வசதிகளில் பெண்கள் குறிப்பிடத்தக்க சமத்துவத்தைக் கொண்டிருக்கிறார்கள். தாய்சேய் மரணவிகிதங்களைக் குறைப்பதிலும் குறிப்பிடத்தக்க நல்லிலக்கு எய்தப்பட்டுள்ளது. எனினும் அரசியல் மற்றும் பொருளாதாரப் பங்களிப்புகள் குறைவா கவேயுள்ளன. அண்ணளவாக 22 மில்லியன் மொத்த சனத் தொகையில் 52வீதம் பெண்களாவார். இலவசக் கல்வியின் நல்லம்சமாக 93வீதம் எனும் ஆண்களின் எழுத்தறிவுக்கு நிகராக 90 வீதம் எழு த்தறிவு பெற்ற பெண்பிரஜைகளைக் கொண்ட நாடு. எனினும் படிப்பை முடித்த பின், குறிப்பாக திருமணத்தின் பின் தொழில் புரியும் பெண்களின் வீதம் குறைவானது.

8.5 மில்லியன் பொருளாதார இயங்கு நிலை கொண்ட மக்கள் தொகையில், பெண்களின் தொழில்படை விகிதாசாரம் மூன்றில் ஒரு பங்காகவே இருக்கின்றது. உயர் பதவிகளிலும், பதவி உயர்வுகளிலும் குறிப்பிட்ட சில துறைகளிலும் பொதுவாக ஆண்களுக்கே மறைமுக முன்னுரிமை அளிக்கப் படுகின்றது ஆணாதிக்க சித்தாந்தங்களின் விளைவாக வீட்டு வேலைகளும், குழந்தை வளர்ப்பும் பொதுவாக பெண்களுக்கானவை என்ற மாறாமரபு மனோவியல் இன்றும் கணிசமாகக் காணப்படுவதும் இவற்றுக்குக் காரணமாகின்றது.

உலகின் முதலாவது பெண் பிரதமரை உருவாக்கிய நாடு இலங்கை. எனினும் இன்று அரசியலில் பெண்களின் பங்களிப்பு 6 வீதத்திற்கும் குறைவான பிரதிநிதித்துவத்தையே கொண்டிருக்கிறது. இது உலகளாவியரீதியிலும் (நிலை182/193) தெற்காசியப் பிராந்தியத்திலும் ஒப்பீட்டு ரீதியில் மிகக்குறைவானதாகும். இதனால் பெண்களின் சமத்துவம் பற்றிய வலியுறுத்தல்கள், சட்டவாக்கங்கள் என்பவற்றில் பாதகமான நிலைமை ஏற்படலாம்.

UNFPA அறிக்கை ஒன்றினை ஆதாரமாகக் கொண்ட 2022 இன்

30 ஆம் பக்கம் பார்க்க...







நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# டீன் ஏஜ் பெண்ணின் அப்பாவா நீங்க?

## உசுப்பேற்றும் எந்த சண்டையையும் நடத்தாமல் இருப்பது நல்லது!

வயசுக்கு வந்த பிள்ளையை வளர்க்க வேண்டியது அம்மாவோட பொறுப்பு என நைஸாக நழுவும் அப்பாவா நீங்கள் ? கொஞ்சம் நில்லுங்கள். உண்மையில் உங்கள் டீன் ஏஜ் மகளுக்கு அம்மாவை விட அதிகம் தேவை நீங்கள் தான். முழிக் காதீங்க”

தந்தையின் நேசம் கலந்த வழி காட்டுதல் இல்லாத பதின் வயதுப் பெண்கள் பல்வேறு சிக்கல்களில் விழுகிறார்கள். சிறுவயதிலேயே அவர்கள் பாலியல் ரீதியாக பலவீனப்படுகிறார்கள். தேவையற்ற தாய்மையைப் பெற்றுக் கொள்கிறார்கள். இதையெல்லாம் நான் சொல்லவில்லை!அமெரிக்கா மற்றும் நியூசிலாந்தில் நடத்தப் பட்ட விரிவான ஆராய்ச்சி ஒன்று சொல்கிறது.

இந்த ஆராய்ச்சியை முன் நின்று நடத்தியவர் நியூசிலாந்திலுள்ள கேண்டர்பர்க் பல்கலைக்கழகத்தின் உளவியல் பேராசிரியரான புரூஸ் ஜே எல் லிஸ். டீன் ஏஜ் பருவத்திலேயே செக்ஸ் பிரச்சினைகளில் மாட்டி கர்ப்பமாவது அமெரிக்கா மற்றும் நியூசிலாந்தில் சர்வ சாதாரணம். இதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என அவர்கள் அலசி ஆராய்ந்தபோது தான் சிக்கியிருக்கிறது இந்த அதிர்ச்சியூட்டும் உண்மை. தந்தையின் சரியான வழிகாட்டுதல், அன்பு, அரவணைப்பு இல்லாதது தான் எல்லா பிரச்சினைக்கும் மூல காரணமாம். இப்போது சொல்லு ங்கள், டீன் ஏஜ் பெண்ணின் வளர்ச்சிக்கு நீங்கள் தேவையா இல்லையா ?

ஒரு டீன் ஏஜ் மகளுக்கு அப்பா என்பவர் வெறும் ஒரு நபரல்ல. ஒரு நண்பன், பாதுகாவலன், ஊக்கமூட்டுபவர், உற்சாக ப்படுத்து பவர், தன்னம்பிக்கை வளர்ப்பவர், நம்பிக்கை ஊட்டுபவர், பண்புகளை ஊட்டு பவர்,வழிகாட்டி என எக்கச் சக்க முகங்கள் அவருக்கு இருக்க வேண்டும். ஒரு பெண் முதலில் சந்திக்கும் ஆண் அவளுடைய அப்பா தானே? அப்பாவிடமிருந்து தான் அவள் ஒரு ஆணுக் குரியஇலக்கணங்களைக் கற்றுக் கொள்கிறாள்.ஆண் என்பவனின் குணாதிசயங்களைக் கற்றுக் கொள்கிறாள். ஆண் என்பவருடைய அளவீடுகளைக் கற்றுக் கொள்கிறாள்.ஆண் என்பவரின் தேவையைக் கண்டு கொள்கி றாள். எனவே மகள் மழலையாய் இருக்கும் போதே எல்லா வகையிலும் முன் மாதிரிகையான வாழ்க்கை வாழவேண்டியது அப்பாவின் கடமையாகிறது.

சின்ன வயதில் மழலையாய் சிரித்துச் சிணுங்குகையில், அழகழகாய் ஆடைகள் வாங்கிக் கொடுப்பதானாலும் சரி, பென்சில்,ரப்பர் வாங்குவதானாலும் சரி ரொம்பவே ஈடுபாடு காட்டுவீர்கள். எல்லாவற்றையும் தேடித் தேடி வாங்குவீர்கள். பாப்பாவும் ரொம்பவே சமர்த்தாய் உங்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தம் தருவாள். திடீரென ஒரு நாள் பார்த்தால், சட்டுபுட்டுன்னு வளர்ந்து நிர்ப்பாள். “என் டாடி சூப்பர்“ என்று சொல்லிக் கொண்டிருந்தவள், “டாடிக்கு ஒரு மண்ணும் தெரியாது“ என்று பல்டி அடிப்பாள். மூக்குத்தியை எடுத்து நாக்கில் மாட்டுவாள். டென்ஷன் ஆகாதீர்கள். எல்லாவற்றுக்கும் காரணம் அவளுடைய உடல்,மன மாற்றங்கள் தான்.

என் பொண்ணுக்கு என்னைக் கண்டாலே பிடிக்கல. அவளுக்கு நான் இனிமே தேவையில்லை என்றெல்லாம் உளறிக் கொட்டாதீர்கள். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் மகள் உங்கள் மகள் தான். உங்கள் மீதான பாசமும், அன்பும்,கரிசனையும் எப்போதுமே அவளிடம் நிரம்பி இருக்கும். ஆனால் அவளுடைய வெளிப் படுத்தல்களில் தான் எக்கச் சக்க மாற்றங்கள் முண்டியடிக்கும்.

“டாடி பிளீஸ” “டாடி” வாங்கிக் கொடுங்க டாடி“ என்று சின்ன வயதில் கெஞ்சிய மகள் “டாட்” எனக்கு இது வேணும். முடியுமா முடியாதா“ என பிடிவாதம் பிடிப்பாள். உடனே நீங்கள் பதட்டப்படுவீர்கள். ஆனால் உண்மையில் அவள் உங்களுடைய அனுமதியை எதிர்பார்த்து நிற்கிறாள். அப்பாவின் அனுமதி இருந்தால் தான் அவளுக்கு அதில் ஒரு ஆத்ம திருப்தி. நீங்க பாட்டுக்கு எல்லாவற்றையும் சகட்டு மேனிக்கு நிராகரித்துத் தள்ளாதீர்கள். “நல்லதுன்னா அப்பா ஒத்துப் பார்“ எனும் நிலமை தான் இருக்க வேண்டுமே தவிர “அவர் கிட்டே என்ன சொன்னாலும் வேலைக்காவாது“ என்ற நிலைக்கு நீங்கள் வந்து விடவே கூடாது.

இது ஒரு நீச்சல் போல. கரையில் இருந்து கொண்டே நீங்கள் ஆர்டர் போட முடியாது. இன்னும் சொல்லப் போனால் டீன் ஏஜ் பருவத்தினருக்கு அட்வைஸ் எனும் வார்த்தையே



17 ஆம் பக்கம் பார்க்க...



# டீன் ஏஜ் பெண்ணின் அப்பாவா நீங்க?





அலர்ஜி. காரணம் பெரும்பாலும் அவளுடைய விருப்பத்துக்கு நேரானதாகத் தான் இருக்கிறது அப்பாக்களின் அட்வைஸ். அதற்காக நல்ல விஷயங்களைச் சொல்லக் கூடாதா என்பதல்ல. அதை செயலில் காட்ட வேண்டும். அல்லது நாசூக்காக விளக்க வேண்டும். பேசுவதை விட மிக மிக அதிகமாய் மகள் பேசுவதைக் கேட்கவேண்டும். அது தான் முக்கியம்.

“எங்க காலம் தான் பொற்காலம்” இப்போ எல்லாம் டெக்னாலஜி சாத்தான் ஆட்டம் போடுது“ என பழமை பேசாதீர்கள். அது உங்கள் டீன் ஏஜ் மகளை உங்களிடமிருந்து ரொம்பவே விலக்கி வைத்து விடும். காலத்துக்கேற்ப மாறிக் கொண்டே இருக்க வேண்டும். உங்கள் மகள் அனிருத்தின் பிரியை என்றால். நீங்களும் அனிருத்தின் நல்ல பாடல்களை மகளுடன் சேர்ந்து இரசிக்கவேண்டும். அப்போது தான் நீங்களும் உங்களை இளமையாக்கிக் கொள்கிறீர்கள் என்று அர்த்தம்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், “என் அப்பா டெக்னாலஜியில் என்னைப் போல ஹைடெக்..“ என கருதுவதில் உங்கள் மகளுக்கு இருக்கும் மகிழ்ச்சி அலாதியானது. நீங்கள் அந்த டெக்னாலஜி உலகுக்குள் நுழைந்தால் தான் அதிலுள்ள நன்மை தீமைகளை நாசூக்காக உங்கள் மகளுக்குச் சொல்லவும் முடியும்! அதை விட்டு விட்டு, “என்ன இவ சாப்பிடும்போதும் மசேச் பண்ணிறா! பேசிகிட்டேயும் எழுதிறா, WhatsApp,TikTok, Twitter இன்னும் ஏதேதோ என்னன்னவோ சொல்றா”.“ என புலம்பித் தள்ளாதீர்கள்.

இன்னொரு விஷயம், உங்கள் மகள் பருவத்துக்குரிய வனப்புடன் வளர்கிறாள் என்றதும் தள்ளியே நிற்காதீர்கள். அது மன அளவில் உங்கள் டீன் ஏஜ் மகளைப் பாதிக்கும் என்கின்றனர் உளவியலார்கள். உங்கள் மகளின் தோளைத் தட்டிப் பாராட்டுவதோ, தலையைக் கோதிப் பாராட்டுவதோ, செல்லமாய் அரவணைத்துக் கொள்தலோ அவளுக்கு ரொம்பவே தேவை.

அடிக்கடி வெளியே கூட்டிப் போங்கள். ஐஸ்கிரீம் பார்லர் போன்ற இடங்களுக்கு ஜாலியாகப் போய் வாருங்கள். மகளுடன் நிறைய நேரம் செலவிடுங்கள். நிறைய நேரத்தை நீங்கள் அவளுடன் செலவிடும்போது அவளுக்கு இயல்பான உரையாடல் சாத்தியப்படுகிறது. நினைத்ததை எப்படியேனும் வெளிப்படுத்தி விடுவாள். அவள் பள்ளியிலோ, கல்லூரியிலோ ஏதேனும் விழா நடக்கிறது, அழைக்கிறாள் என்றால் தவற விடாதீர்கள். வெறுமனே நீங்கள் அவளுடன் இருந்தால் போதும் அவள் உங்களை ரொம்பவே கொண்டாடுவாள். நீங்கள் அவளை அன்பு செய்கிறீர்கள். சரி! மதிக்கிறீர்கள்.சரி! ஆனால் அதை அவளிடம் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறீர்களா? இல்லையேல் அதைச் சொல்லுங்கள் முதலில். டீன் ஏஜ் மனது எதிலும் வெளிப்படையாய் இருக்க விரும்பும் மனது. சுற்றி வளைத்து எதையும் பேசாமல், உங்கள் மகளை நீங்கள் மதிக்கிறீர்கள், அன்பு செய்கிறீர்கள் என்பதைச் சொல்லி விடுங்கள்.

டீன் ஏஜ் மகளின் தினசரிகள் பல்வேறு அனுபவங்களால்நிரம்பிவழியும். ஆனந்தம், கவலை, எரிச்சல், சோகம் என எக்கச்சக்க உணர்வுகள் நிரம்பி வழியும். சக தோழிகளின் கிண்டல், காதல், படிப்பு, அழகு என கண்டதுக்கும் கவலைப்படும் வயது அது. அதை முதலில் நீங்கள் எப்போதும் நினைவில்கொள்ளவேண்டும். “எதுவானாலும் கவலையில்லை ” அப்பா இருக்கிறார்“ எனும் நம்பிக்கையை நீங்கள் உங்கள் மகளிடம் ஊற்ற முடிந்தால் அதை விடப் பெரிய விஷயம் ஏதும் இல்லை. அதற்கு மகளிடம் உண்மையாய் இருக்க வேண்டியது உலக மகா தேவை !

மகளிடம் நீங்கள் எந்த அளவுக்கு உண்மையாய், நம்பிக்கைக்குரியவராய் இருக்கிறீர்களோ அந்த அளவுக்கு அவள் உங்களிடம் வெளிப்படையாய் பேசுவாள். உண்மையை உள்ளபடி பேசுவாள். அப்படி மனம் திறந்து பேசும் போது எந்தக் காரணம் கொண்டும் அவளைத் திட்டாதீர்கள். அவள் என்னதான் மிகப்பெரிய தவறு செய்திருந்தாலும் சரி, உணர்ச்சி வசப்படாதீர்கள். பிரச்சினைகள் “விளைவுகள்” தீர்வுகள் என சிந்தியுங்கள். நீங்கள் பதட்டப்பட்டு உங்கள் கோபத்தையும், ஆத்திரத்தையும் மகளிடம் காட்டி விட்டால் போச்சு. அது வீட்டைப் பூட்டி சாவியை தூர எறிவதற்குச் சமம். உங்கள் மகள் அதன் பின் உங்களிடம் எதையும் பேசுவாள் என்று சொல்வதற்கில்லை.

எப்போதும் அவளிடம் தோழமை உணர்வுடன் பழகுங்கள். அடிக்கடி உங்கள் மூடு மாறாமல் இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம். “அப்பா எப்போ அமைதியா இருப்பாரு, எப்போ எரிஞ்சு விழுவாருன்னு தெரியாது“ எனும் நிலமை வந்தால் சிக்கல் தான். அவளுடைய படிப்பு, நட்பு, காதல் எல்லாவற்றிலும் உங்கள் அளவான ஈடுபாடு இருக்கட்டும். “அவளுக்கு இதெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை“ என்று மட்டும் எப்போதும் நினைக்காதீர்கள். குறிப்பாக ஆண்களைப் பற்றியும், ஆண்களின் குணாதிசயங்கள், சிந்தனைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றைப் பற்றியும் அவளுக்குப் புரியும் வகையில் அவ்வப்போது சொல்வது அவசியம். வெளுத்ததெல்லாம் பாலல்ல, விஷம் கூட உண்டு என்பதை அவள் தெரிந்து கொள்ள வேண்டும், அதான் விஷயம்.

இந்த அப்பா மகள் பந்தத்தில் யாருக்கு அதிக பொறுப்பு என நினைக்கிறீர்கள்? அப்பாவுக்கு என்று சொன்னால் நீங்கள் ஒரு பொறுப்பான அப்பா என்று அர்த்தம். டீன் ஏஜ் மகளின் மனநிலையைப் புரிந்து கொண்டு பொறுமையாக வழிகாட்ட வேண்டியது உங்கள் கடமை. ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். டீன் ஏஜ் பருவம் தொட்டால் வெடிக்கும் பருவம். சின்னச் சின்ன மன வருத்தங்களுக்காக தற்கொலை செய்து கொள்வது கூட இந்த வயதில் சகஜம். அதனால் அவளை உசுப்பேற்றும் எந்த சண்டையையும் நடத்தாமல் இருப்பது நல்லது. குறிப்பாக அவளுடைய தோற்றம், அழகு, ஆடைகள் போன்றவற்றைக் கிண்டலடிக்காதீர்கள். மாறாக, பாராட்டுங்கள். பாராட்டுக்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும். அவளை வலுவாக்கும்.

சமூகம் சார்ந்த பல அறிதல்களையும் நீங்கள் தான் அவளுக்குச் சொல்லித் தர வேண்டும். பெரும்பாலான இளம் பெண்கள் புகை, போதை என பரிசோதித்துப் பார்ப்பது இந்தப் பதின் வயதில் தான். அவற்றைப் பற்றிய தெளிவை மகளுக்குத் தரும் பொறுப்பும் உங்களிடமே.

ஒரு ஆச்சரிய உண்மை என்னவென்றால், பதின் வயதுத் தொடக்கத்தில் இருக்கும் மனோபாவம் நாள் செல்லச் செல்லப் பக்குவப்படும். பெண்ணின் திருமண வயது வரும்போது “அப்பா தான் உலகம்“ எனும் நிலைக்குப் பெண்கள் வந்து விடுவார்கள். அதுவரை சலிக்காத வழிகாட்டலும், பொறுமையான அணுகு முறையும், நிபந்தனையற்ற அன்பும் நீங்கள் காட்ட வேண்டியது அவசியம்.

சின்ன வயதிலிருந்தே தந்தையின் வழிகாட்டுதலிலும், அன்பிலும் வளரும் குழந்தைகள் நல்ல மன வளர்ச்சி அடையும் என்கிறார் எழுத்தாளரும் மருத்துவருமான மெக் மீக்கர். “ஸ்ட்ராங் ஃபாதர்ஸ், ஸ்ட்ராங் டாட்டர்ஸ்“ எனும் நூலில் அப்பாவின் வழிகாட்டுதலே பதின் பருவப் (டீன் ஏஜ்) பெண்களுக்கு மிக மிகத் தேவை என்கிறார். “என் பொண்ணோட வாழ்க்கையில் மிக முக்கியமான நபர் நான்“ எனும் எண்ணம் அப்பாக்களுக்கு வரவேண்டியது தான் முதல் தேவை என்கிறார் இவர்.

இன்னொரு முக்கியமான விஷயம், நீங்கள் உங்கள் மகளை எப்படி நடத்துகிறீர்கள் என்பதை வைத்து மட்டும் உங்கள் மகள் உங்களை எடை போடுவதில்லை. உங்கள் மனைவியை நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள், மற்றவர்களை எப்படி நடத்துகிறீர்கள் என்பதையெல்லாம் அவள் கூட்டிக் கழித்துப் பார்ப்பாள். நீங்கள் எல்லா இடத்திலும் வலுவாக இல்லையேல் நீங்கள் அவளிடம் காட்டும் அன்பை போலித்தனம் கலந்ததாக அவள் கருதிக் கொள்ள வாய்ப்பு உண்டு.

கடைசியாக ஒன்று. “ என் அப்பாவைப் போல நல்ல ஒரு ஆண் எனக்குக் கணவனாக வர வேண்டும்“ என உங்கள் மகள் நினைக்க வேண்டும். அப்படி நடந்தால் நீங்கள் ஒரு அப்பாவாக ஜெயித்து விட்டீர்கள் என்று பொருள் ! ஜெயிக்க வாழ்த்துக்கள் !


## வெற்றிமணி திருமண சேவை



நன்கு படித்த, Master முடித்த யேர்மனியில் Bonn நகரில் வேலை செய்யும் 1993 ம் ஆண்டு பிறந்த பெண்ணுக்கு (உயரம்171cm) சிறந்த மணமகன் தேவை Nordrhein-Westfalen மாநிலத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: அமரன் 01731833664



மணமகன் தேவை!

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற பட்டதாரி மணமகன் தேவை. தற்போதைய பாடசாலையிலேயே தொழிலைத் தொடரக்கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.

பெற்றோர் தொடர்பு கொள்ளவும். 4915774318528

Wirtschaftsingenieur படித்த 34 வயதுடைய நற்குணமுடைய சைவ வேளாளர் பெண்ணுக்கு, பொருத்தமான பட்டதாரி மணமகன் தேவை.

பெற்றோர் தொடர்புகொள்ளவும்: 4915774318528


PALAZIO
EVENTLOCATION
உங்கள் இல்லத்தின்
சகல விதமான மங்கல வைபவங்களுக்கும்,
மேடை நிகழ்வுகளுக்கும் ஏற்ற,
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் ஓர் அழகிய மண்டபம்!
450 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய
வசதியுடனும் கூடியது!
மேலும் எம்மிடம்....
★ போட்டோ மற்றும் வீடியோ
PALAZIO_EVENTLOCATION
+ (49) 1525 3961138
PALAZIO EVENTLOCATION
Kasinostr. 25 | 42103 | Wuppertal | apollogastrogmbh@gmail.com




# பாட்டொன்று கேட்டேன் பரவசமானேன்!

## இசைக்குப் பின் இருக்கும் அறிவியல் என்ன?



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

உங்களுக்குப் பிடித்த பாடல் என்ன? அம்மம்மாவைக் கேட்டால் "பச்சைக் கிளி முத்துச்சரம் முல்லைக்கொடி யாரோ" பிடிக்கும் என்பார். அப்பாவிடம் கேட்டால் "வா வெண்ணிலா உன்னைத் தானே வானம் தேடுதே" என்பார். அதுவே ஒரு இளைஞரிடம் கேட்டால் "போற போக்கில் ஒரு லுக்க விட்டு என்ன செஞ்சிட்டாளே, என்ன செஞ்சிட்டாளே" என்பான். தமிழர்களிடம் மட்டும் இல்லை, இந்த உலகில் யாரைக் கேட்டாலும் சரி, இசையைப் பிடிக்காதவர்கள் இருக்கவே மாட்டார்கள். அனைவருக்கும் பிடித்த பாடல்கள், பிடித்த பாடகர், பிடித்த இசையமைப்பாளர் என இருக்கத்தான் செய்யும். ஆனால், ஏன் எல்லோருக்கும் இசை என்றால் பிடிக்கிறது? சிலருக்கு இசை ஒரு போதை போன்று மகிழ்ச்சியைக் கொடுக்கிறதே. இசையில் அறிவியல் ரீதியாக அப்படி என்ன தான் இருக்கிறது?

இசை எல்லோருக்குமே புரிகின்ற ஒரு மொழி என்றே கூறலாம். வார்த்தைகளால் நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதை விட இசையால் வெளிப்படுத்துவது மிகவும் இலகுவாக இருக்கும். அடிப்படையில் இசை என்பது வேறு ஒன்றும் இல்லை: பல ஒலி அதிர்வெண்கள் (audio frequency) கலந்து விதம் விதமான வடிவங்களில் காற்றில் மிதந்து நமது செவிகளை அடைவதைத் தான் இசை என்று கூறுகின்றோம். நமது கண்கள் ஒளியை எவ்வாறு செயலாக்கம் செய்கின்றனவோ, அதே போன்று தான் நமது காதுகளும் ஒலியைச் செயலாக்கம் செய்கின்றன. உண்மை சொல்லப்போனால் நாம் பிறப்பதற்கு முன்பே இசையைக் கேட்க ஆரம்பித்து விடுகின்றோம். என்ன நண்பர்களே, புரியவில்லையா? நாம் நமது தாயின் கருப்பையில் இருந்த போது, நமது கண்களால் ஒன்றுமே பார்க்கமுடியாமல் இருந்தோம். ஆனால், நாம் நமது காதுகளால் எப்போதுமே இசையை ரசித்துக்கொண்டு தான் இருந்தோம். அது வேறு ஒன்றுமே இல்லை, நமது தாயின் இதயத்துடிப்பு தான். எப்போதுமே நமக்கு தாலாட்டு போல் அந்த இதயத் துடிப்பின் இசையில் நாம் உறங்கிக் கொண்டு இருந்திருக்கிறோம்.

மனித உடலில் இருக்கும் ஒரு சுவாரசியமான குணம் என்னவென்று தெரியுமா? உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான சம்பவங்கள் நமது உடலுக்குள் நடைபெறும்போது நமது மூளை மகிழ்ச்சி மற்றும் திருப்தி போன்ற உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிறது. உதாரணத்திற்குப் பசிக்கும் போது நாம் தேவைக்கு ஏற்ற மாதிரி உணவு அருந்திவிட்டதும் நமது பசி தீர்ந்துவிட்டு, உடனடியாக சந்தோஷமும் திருப்தியும் அடைந்து விடுகின்றோம். ஆனால், உண்மையில் அந்நேரம் என்ன நடைபெறுகிறது என்றால் டோபமீன் (dopamine) எனப்படும் வேதியியல் பொருள் நமது மூளைக்குள் வெளியிடப்படுகிறது. இது நரம்புக்கடத்தியாக (neurotransmitter) பணிபுரிந்து இந்தச் சந்தோஷமும் திருப்தியும் கலந்த உடல்நிலைக்குக் காரணமாக இருக்கிறது. இதேப்போன்று தான் போதைப்பொருட்கள் பாவிக்கும் வேளையில் டோபமீன் வெளியிடப்பட்டு நாம் வானத்தில் மிதப்பது போல் இருக்கிறது. நமது உடலில் அந்தப் போதைப் பொருள் குறையும்போது டோபமீன் வெளியிடுவதும் நிறுத்தப்படுகிறது. எனவே, தொடர்ந்து மகிழ்ச்சி நிலையை அடைவதற்காக மேலும் அந்தப் போதைப்பொருளை உள்வாங்க வேண்டியதாகிவிடும். அத்துடன் நமது உடலும் அந்தப் போதைப்பொருளுக்கு அடிமை ஆகி விடுகிறது.

இதில் சுவாரசியமான விஷயம் என்ன தெரியுமா? நாம் இசையை ரசிக்கும் போது நமது உடலில் பல செயல்கள் நடைபெறுகின்றன. இரத்த அழுத்தம் அதிகரித்து நமது மூளையில் உள்ள பல்வேறு பகுதிகள் இயங்கத் தொடங்கிவிடுகின்றன. இசை, நாம் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானது இல்லை என்றாலும், அதை ரசிக்கும் போது நமது மூளையில் டோபமீன் வெளியிடப்படுகிறது. அதன் விளைவு என்னவென்று உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும். அதாவது, நாம் மகிழ்ச்சி கலந்த திருப்தி நிலையை அடைந்து விடுகின்றோம். இன்று வரை அதன் காரணத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடிக்கவில்லை. போதைப்பொருட்கள் நம்மை அடிமை ஆக்குவது போல் இசையும் ஒரு விதமாக நம்மை அடிமை ஆக்கிவிடுகிறது. ஒவ்வொரு மனிதனின் இசைச் சுவை வித்தியாசமாக இருந்தாலும் அதன் விளைவு எப்போதும் ஒன்றாகத் தான் இருக்கிறது.



டோபமீன் வெளியிடுவது மட்டும் இல்லாமல் இசை கேட்கும் போது நமது உடலில் மேலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக நமது உடலில் எல்லாமே ஒரு தாளத்திற்கு அடங்கியதாகத் தான் இருக்கிறது. நமது இருதயம் துடிப்பது ஒரு தாளத்தில். நாம் சுவாசிக்கும் போது பிராணவாயு உள்வாங்கி கரியமிலவாயு வெளியேற்றுவது இன்னும் ஒரு தாளம். கடினமான வேலை செய்யும் போது இருதயத் துடிப்பு மற்றும் சுவாசத்தின் தாளம் அதிகரித்து விடுகிறது. அதே போன்று தான் நாம் இசை கேட்கும் போதும் இந்தத் தாளங்கள் மாறிவிடுகின்றன. அதன் விளைவாக இரத்த அழுத்தம் மற்றும் மூளையின் செயல்பாடும் மாறிவிடுகின்றது. பொதுவாக நமது இருதயம் ஒரு நிமிடத்தில் 72 தடவைகள் துடிக்கின்றது. இந்தத் துடிப்பை 72 பீட்ஸ் பேர் மினிட் (Beats per Minute, BPM) என்று சொல்வார்கள். அதே போன்று தான் இசையின் தாளத்தையும் BPM ஊடாக

28 ஆம் பக்கம் பார்க்க...



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar



Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425




# ஆண்களை மிஞ்சி வாழ்வது நோக்கமல்ல!
# ஆண்களைத் தங்கி வாழப் பிடிப்பதில்லை!

மகளிருக்காக ஒரு தினம் கொண்டாடப்படும் இந்தத் தருணத்தில் நான் கல்பனா சவ்லா பற்றியோ மேரி கோம் பற்றியோ ஆராயப் போவதில்லை. தற்காலப் பெண்கள் பற்றியே சிந்திக்கத் தொடங்குகின்றேன்.

அன்றைய ஔவையாரின் திறமையும் துணிச்சலும், ஆண்டாளின் பிடிவாதமும், வெள்ளிவீதியாரின் உணர்வு வெளிப்பாட்டுத் தைரியமும் இடைப்பட்ட காலத்தில் எங்கே போனது என்று பூதக்கண்ணாடி போட்டுத் தேடியபோது தற்காலம் மீண்டுமாய் நிமிர்கிறது. தாய்வழி சமுதாயம் தந்தை வழி சமுதாயமாக மாறியது எப்படி? ஒரு குடும்பத்தை வழி நடத்தத் தெரிந்த பெண்ணுக்கு நாட்டை வழி நடத்தத் தெரியாதா? ஊதாரிக் கணவனைக் கண்டிப்போடு வழிநடத்தி வீட்டுக் கணக்கை போட்டுக் கொடுப்பவள் அந்தத் தலைவனுடைய மனைவி அல்லவா?

> **“தற்காத்து தற்கொண்டான்**
> **பேணித் தகைசான்ற**
> **சொற்காத்துச் சோர்விலாள் பெண்”**

ஒரு நாட்டை ஆளுவது என்பது மீன் குழம்பு வைப்பது போலே இருக்குமா? இல்லை பிள்ளையைக் குளிப்பாட்டுவது போல இருக்குமா என்ற கேள்வி ஆண்கள் மத்தியில் எழுந்ததற்குக் காரணம் என்ன? தமது இயலாமையை அதிகாரமாக சொல்லத் தெரிந்த தைரியமே. குழந்தை வளர்ப்பு என்பது சாதாரணமான விடயம் இல்லை. எதிர்கால சமுதாயம். நாளைய நாட்டுப் பிரஜைகள் அறிஞர்கள், ஜனாதிபதிகள் ஆவர். பிள்ளையின் பார்வையிலேயே அதனுடைய உள் உணர்வுகளைப் புரியக் கூடியவள் தாய். தாயின் பார்வையே பிள்ளைக்குப் பாடம் நடத்தும். பெரியவர்கள் மத்தியில் அடக்கமில்லாமல் இருக்கும் போது தாயின் கண்களே பிள்ளைக்குக் கட்டளை போடும். தாய் என்னும் பதவி ஒரு சாதாரண பதவியாகக் கொள்ள முடியுமா? இது எல்லாம் ஒரு புறம் இருக்க இக் காலப் பெண்கள் அக்காலப் பெண்கள் போல இல்லை என்னும் குற்றச் சாட்டு இருக்கின்றது. சங்ககால ஔவையார் சங்க இலக்கியங்களில் குறுந்தொகையில் 15 பாடல்களும், நற்றிணையில் 7 பாடல்களும், அக நானூற்றில் 4பாடல்களும், புறநானூற்றில் 33 பாடல்களும் பாடியிருக்கின்றார். இன்னும் எத்தனையோ பாடியிருக் கலாம். ஆனால், கடல்கோள்களுக்குத் தப்பி இத்தனை மட்டுமே எமக்குக் கிடைக்கின்றன. கல்வியறிவால் உயர்ந்த ஔவாயார் குலோத்துங்கன் சோழன் அவையிலே கம்பரை



> **“எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே**
> **மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற்க்**
> **கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே**
> **ஆரையடா சொன்னாயது.”**

என்று அவலட்சணம், எருமை, மூதேவி, குட்டிச் சுவர், குரங்கு என்று பாட்டால் வைதிருக்கும் தைரியமும், அதியமான நெடுமான் அஞ்சியின் அன்புத் தோழியாக இருந்ததுடன் அவர் அளித்த கெட்டிக் கரையையுடைய பட்டாடை பெற்றுக் கொண்டதுடன், பழைய கள்ளை பொற்கிண்ணத்தில் பருகக் கொடுத்து மன்னன் உணவு பரிமாறிய சம்பவங்களும் அறியக்கிடக்கின்றன. ஆனால், ஒரு பெண் ஆணுடன் நட்பு வைத்துக் கொள்வது அடங்காப்பிடாரித்தனம், கற்பை மீறிய செயல் என்று இப்போதும் சிலருடைய கூற்றுக்களுக்கு எதிராகப் பெண்கள் இப்போது டீநளவல வைக்கத் தொடங்கிவிட்டார்கள். அதற்கும் மேலே என்று காதலனுக்கும் மேலே Besty இடம் நட்பு வைத்திருக்கின்றார்கள்.

> **“வானிடை வாழுமவ் வானவர்க்கு**
> **மறையவர் வேள்வியில் வகுத்தஅவி**
> **கானிடைத் திரிவதோர் நரி புகுந்து**
> **கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப**
> **ஊனிடை யாழி சங்குத்தமார்க் கென்று**
> **உன்னித்தெழுந்த வென் தடமுலைகள்**
> **மானிடவர்க்கென்று பேச்சுப்படில்**
> **வாழ்கில்லேன் கண்டாய் மன்மதனே“**

என்று அக்காலத்தில் பாடும் ஆண்டாள் தைரியம் யாருக்கு வரும். இன்று பெண்களின் கவிதைகளில் அதிகமாக ஆபாசம் இருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் மேலோங்கி வரும் நிலையில் ஆணென்ன பெண் என்ன? அந்தப் பால் வேறுபாடுகளே தேவையில்லை என்று பேசத் தொடங்கிவிட்டார்கள். இன்று ஆண்களின் பாலியல் தொல்லைகளை அநந வழழ என்று ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக எடுத்துக் கூறுகின்றார்கள்.

“ஏதிலாளன் கவலை கவற்ற ஒருமுலை அறுத்த திருமா உண்ணி என்னும் நற்றிணைப் பாடலிலே பகைவன் செய்த கொடுமையானது உள்ளத்தை அரித்தெடுக்கத் தன் ஒரு முலையை அறுத்துக் கொண்ட திருமாவுண்ணியும், நீதி தவறிய நாட்டை வாதாடித் தீயால் அழித்த சிலப்பதிகார நாயகி கண்ணகியும் தைரியத்துக்கு எடுத்துக்காட்டுக்கள். கணவன் நல்லவனா கெட்டவனா என்பது கேள்விக்குறி. ஆயினும் அச்செயலை அவன் செய்திருக்க மாட்டான் என்னும் நம்பிக்கையும், அம்மன்னனின் நீதி தவறிய செயலும் அவளுக்கு மனதில் தீயாய் பற்றி எரிந்தது. திருமாவுண்ணி அதன் பின் வாழ்ந்தாளா என்பது கேள்விக்குறி. ஆயினும் செயலைத்தான் நாம் நோக்கவேண்டிள்ளது. இக்காலத்திலும் கணவனுக்குப் பயந்து பெண் அடங்கிக் கிடக்கவில்லை. சமூகத்தின் கேள்விகளுக்கு அவள் பயப்படவில்லை. ஓஓஐயோ சாமி நீ எனக்கு வேண்டாம்;; என்று தூக்கி எறிந்துவிட்டுப் போக அவளுடைய கல்வியும், தன்னம்பிக்கையும், துணிச்சலும் கைகொடுக்கின்றன.

காரைக்காலம்மையார் சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்தவர். அவருடைய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகமே பிறகால பல்லவர்கால இலக்கிய வடிவமான பதிகத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தது. பிடிவாதமும் முற்போக்கு சிந்தனையும் உள்ளவர். கணவனோடு மட்டுமே சிவனடியார்களுக்கோ விருந்தினர்களுக்கோ உணவு பரிமாற முடியும் என்றிருந்த அக்கால வழக்கத்தை உடைத்து கணவன் அனுப்பிய மாங்கனியின் ஒன்றை கணவனுக்குத் தெரியாமலே சிவனடியாருக்குப் படைத்தவர். அதனைக் கணவனுக்குத் தெரியாமல் மறைத்தவர். அத்துடன் உணவை ஒறுத்து உடலை மெலிய வைத்து ஊர் ஊராகச் சென்று சிவத்தொண்டு புரிந்தவர்.

28 ஆம் பக்கம் பார்க்க...






## புனித பூமியின் மனிதத் தெய்வம்

# நயினைச் சித்தர் முத்துக்குமார சுவாமிகளுக்கு திருவுருவச்சிலை திறப்பு!


பிறக்கப்பேறும் இறக்க முத்தியும் தரும் சிறப்புக்குரியதும், அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக் கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ நாகபூசணி கோவில் கொண்டிருக்கும் நயினாதீவில் ஆன்மீக சீலராக ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் வைத்துப் போற்றப்படும் நயினைச் சித்தர் தவத்திரு முத்துக்குமார சுவாமிகள் அவதரித்துள்ளதுடன் அவர்களுடைய ஜீவ சமாதி ஆன்மீக அலைவீச்சுடன் அமைந்திருப்பதும் சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்குவதும் நயினாதீவு எனும் புனித பூமியாகும்.





செல்வி
அம்பிகைபாகன்
ஸ்ரீ சுகன்யா
(5ம் வட்டாரம் நயினாதீவு)

இப் புனித பூமியிலே நயினைச் சுவாமிகள் என்று அழைக்கப்படும் தவத்திரு முத்துக்குமார சுவாமிகள் அவர்கள் ஆறுமுகம் பார்வதி தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக 1896ல் அவதரித்தார்கள். இவர் சிறு வயதில் தில்லையம்பல வித்தியசாலையில் கல்வி பயின்றார். இளம் வயதில் இருந்தே இவரிடம் ஆன்மீக நாட்டமும் கவிபாடும் திறனும் இருந்தது. ஒரு நாள் கதிரமலைக்கு செல்லும் வழியில் இரவு நேரத்தில் ஒரு வில்வ மரத்தடியில் தங்க நேரிட்டது. அந்த தனிமையும் நிசப்தமுமான சூழலில் முத்துக்குமாருவுக்கு தீட்சையும் குரு உபதேசமும் கொடுக்கப்பட்டது. கதிர்காம யாத்திரையின் பின்னர் அந்தப் பெரியவர் தனது வந்தகாரியம் நிறைவேறியமையால் எங்கோ சென்றுவிட்டார். இச்சம்பவத்திற்கு பின்னர் சுவாமி அவர்களும் யாருக்கும் தெரியாது தன் குருவைத் தேடி இந்தியா சென்றுவிட்டார். அங்கு திருவண்ணாமலையில் ரமண மகரிஷியின் அனுக்கிரகம் கிடைக்கப் பெற்று சித்தர்களும் தவயோகிகளும்



வாழும் அருணாசல குகையில் சமாதி நிஷ்டையில் சிலகாலம் அமர்ந்திருந்து தவயோக வாழ்வு வாழ்ந்தார்கள். அதன் பின்னர் 1933ம் ஆண்டு சுவாமிகள் காவி வஸ்திரத்துடன் எவராலும் இனங்காண முடியாத தோற்றத்தில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவத்தில் கலந்து கொண்டதுடன், நயினாதீவில் பிற ஆலயங்களுக்கு செல்வதும் இரவில் அம்பாள் ஆலய வடமேற்கு வீதியில் அமைந்துள்ள அன்னப்பிள்ளை மடத்தில் தங்குவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சர்வதாரி வருடம் உத்தராயன காலமாகிய தைத்திங்கள் 13ம் நாள் 26.01.1949ம் ஆண்டு புதன்கிழமை இரவு 12 மணிக்கு சுவாமிகள் பத்மாசன மிட்டு தியானத்தில் இருப்பது போல் அமர்ந்தவாறு உலக வாழ்வை விட்டு விதேக முக்தியடைந்தார்.

தற்போது இச்சமாதி கோவில் சோமஸ்கந்த ஈஸ்வரம் என்ற பெயரோடு ஆன்மிக அருள் ஒளி வீசும் தலமாக திகழ்கின்றது.

சுவாமிகளுக்கு மேற்படி ஆலயத்தில் திருவுருவச்சிலை அமைக்க உவகையுற்ற அவர் தம் அடியவர்கள் அன்பால் இணைந்து அத்திருப்பணியை முன்னெடுத்தனர். குறித்த புண்ணிய காரியம் யாழ் அத்தியார் இந்துக் கல்லூரியின் சித்திர பாட ஆசிரியரான திரு. தவராசா கபேஸ்சன் மற்றும் யாழ் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் சித்திர பாட ஆசிரியரான திரு.இராசரத்தினம் கிருபா கரன் ஆகிய சிற்ப வல்லுனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களது தளராத உழைப்பினால் திருப்பொலிவுடன் அமைக்கப்பட்ட திருவுருவச்சிலை சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் 2023.02.05 ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நன்னாளில் திருக்குட முழுக்குடனும் முதற்பூசை வழிபாட்டுடனும் திறந்து வைக்கப்பட்டது. “இறைவன் திருவருளும் சுவாமிகளின் குருவருளும் எம் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்தனை செய்வோம்“சுபம்



# ஈழ மண்ணில் ஒரு பெண்களின் காதலும் காதல் பரிசும்

## திருமதி லீலாவதி இராமநாதன்

சேர்.பொன்.இராமநாதனின் காதலி. அவுஸ்ரேலியாவை தாய்நாடாகக் கொண்ட ஆங்கிலேயப் பெண்மணி. இராமநாதன் அவரகள் உயில் எழுதப்போகிறேன் என்றபொழுது தானும் சேர்ந்து தன் கை, காதுகளில் இருந்த வைர ஆபரணங்கள் அனைத்தையும் பூஜை அறைக்கு முன்னால் கழற்றி வைத்துவிட்டு இனிமேல் இவற்றை தான் அணியப் போவது இல்லை இனி அனைத்தும் தர்மச்சொத்துக்கள் என்று “பார்வதி பரமேஸ்வரர் சாட்சியாக திரு.சேர்.பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் அவர்தம் பாரியார் ஆகிய திருமதி. லீலாவதி இராமநாதன் ஆகிய நாங்கள் எழுதும் உயில்“ என தானும் தனது சொத்துக்கள் அனைத்தையும் தன் கணவரின் இறுதிக்கால கனவாகிய பரமேஸ்வராக் கல்லூரிக்கும் இராமநாதன் மகளிர் கல்லூரிக்கும் அர்ப்பணித்தவர். தன் கணவரின் மறைவுக்குப் பின்னாலும் ஒரு தனிப் பெண் ஆளுமையாக நின்று அந்த இரு பெரும் கல்லூரிகளையும் வடிவமைத்து நிர்வகித்தவர். அதற்காகவே அம்மையாருக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

**( இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் வழங்கப்பட்ட முதலாவது கௌரவக் கலாநிதிப் பட்டம்)**







# நோர்வேயில் அரங்கம் 2023



# 'உயிர் மிகும் ஓவியங்கள்': நடன நாடகம்

எழுத்துருவாக்கம்: **கவிதா லட்சுமி**

நோர்வேயில் கலாசாதனா நடனக் கலைக்கூடத்தின் 21வது ஆண்டு விழா ஜனவரி 22, பாறூம் பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அரங்கம் இரண்டு பகுதிகளாக இடம்பெற்றது. நிகழ்வின் முதற்பகுதி சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய 'பதினோராடலைத் தழுவிய குழுநடனங்கள்'. இரண்டாம் பகுதி 'உயிர்மிகும் ஓவியங்கள்' – நடன நாடகம்.

ஓவியம் என்பது காண்பியற் கலை. அந்தக் கலையை இன்னொரு கலை வடிவத்தினூடாக அல்லது பல கலை இலக்கிய வடிவங்களின் ஊடாக வெளிப்படுத்துவதென்பது புதியதோர் காட்சி பூர்வ அனுபவத்தைக் கொடுத்தது. ஒரு ஓவியனையும் அவனது ஓவியங்களையும் வெளிப்படுத்துகின்ற நடன நாடகப் படைப்பாக அது உருவாக்கப் பட்டிருந்தது.

மூன்று அம்சங்களை இந்நடன நாடகம் வெளிப்படுத்தியது. ஓவியர் ரவிவர்மாவை ஓர் ஓவியனாக அறிமு–கப்படுத்தியது அவனது ஓவியங்களின் தன்மைகளையும் பல்வகைமைகளையும் பிரதிபலித்தது. இந்தியக் கலை மரபின் அழகியற் கோட்பாடுகளையும் வெளிப்பாட்டு முறைமைகளையும், வடிவங்களையும், பேசுபொருட்களையும் ரவிவர்மாவின் ஓவியங்கள் எவ்வகையாகப் பிரதிபலித்தன என்பதைப் பேசியது. ரவிவர்மா! இந்திய ஓவியக்கலையில் தவிர்க்க முடியாத பெயர். அவரது ஓவியங்கள்,அழகியல்,ஆன்மீகம் மற்றும் கதைசொல்லல் ஆகியவற்றால் அடையாளப்படுத்தப்படக்கூடிய அவரது படைப்புத் தளங்கள் விசாலமானவை.

நவரசங்கள், அவதாரங்கள், புராண மற்றும் இதிகாசங்கள், கடவுள்களின் புதிய வடிவங்கள், அரசவை மனிதர்கள், இந்திய அழகிகள், வாழ்வின் துன்பங்கள் என்றவாறான அம்சங்கள் அனைத்தும் ரவிவர்மாவின் ஓவியங்களின் கருப்பொருட்களாகினரவிவர்மாவின் ஓவியங்களினூடும் நாட்டியத்தினூடும் இந்தியக் கலைகளின் அடிப்படை அங் கங்களைத் தரிசிக்கும்படியாக 'உயிர்மிகும் ஓவியங்கள்' அரங்க நிகழ்வு அமைந்தது.

இந்த நடன அரங்கம் இந்திய கலையின் அடிப்படை அம்சங்களை ரவிவர்மாவின் பார்வையில் அதாவது ரவிவர்மாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியங்கள் மூலம் பிரதிபலித்தது.ஆன்மீகம்,கதைசொல்லல்,அழகியல்,குறியீடு, யதார்த்தவாதம்,காதல்,காமம் ஆகியன ஆடல்களாலும் பாடல்களாலும் இசையாலும் கதைகளாலும் நிரப்பப் பட்டிருந்தன.

ஓவியனும் அவனது ஓவியங்களும் ஆடற்கலையினூடு வெளிப்பட்டன. பேசுபொருளின் அடிப்படையிலான இந்தப் படைப்பில் பாரதி, பாரதிதாசன் பாடல்கள், கவிதைகள், செய்யுட்கள், திருக்குறள், இசை, கதைசொல்லல் எனக் கலையினதும் இலக்கியத்தினதும் பல்வேறு அம்சங்கள் சங்கமித்தன. நடனக் கலைஞர்களின் சிறப்பான ஆற்றுகை,அரங்கப்பொருட்கள்,உடைகள்,ஒளியமைப்பு,பிரமாண்ட மேடை என்பன நடன நாடகத்தின் நேர்த்தியான வெளிப்பாட்டிற்குத் துணைநின்றன. இந் நடன நாடகத்திற்கான எழுத்துருவை உருவாக்கியவர் கவிதா லட்சுமி. நடன அமைப்பு,நெறியாள்கை, ஒளி யமைப்பும் அவரே. அரங்கக் கலைப்பொருள் உருவாக்கம் கரிகாலன் கதிர் மற்றும் விஸ்ணுசிங்கம் கண பதிப்பிள்ளை. பாடல்களுக்கான மற்றும் பின்னணி இசை அஷ்வமித்ரா.

தமிழர் ஆடற்கலை உட்பட்ட இந்தியக் கலை மரபுகளின் தனித்துவத்தன்மைகளை வரலாற்று, சமூக ஆய்வுப் பார்வையில் நோக்குவதற்கும் காட்சிபூர்வ அனுபவத்தைப் பெறுவதற்கும் இத்தகு படைப்புகள் துணைநிற்கக் கூடியன.

கவிதா பேசுபொருள் அடிப்படையிலான நடனம்,நடன நாடகங்கள் மற்றும் தனது மாணவிகளின் அரங்கேற்றங்களைத் தொடர்ச்சியாக படைப்பாக்கம் செய்து வருபவர். கவிதாவின் புத்தாக்கக் கலைப்படைப்புகளின் வரிசையில் 'உயிர் மிகும் ஓவியங்கள்' நடன நாடகமும் இணைந்து கொண்டது. கலை ஆர்வலர்களுக்கு நல்லதோர் கலா அனுபவத்தை இந்நிகழ்வு வழங்கியது. நிகழ்ச்சியை மூன்று வார்த்தைகளில் விபரிக்கலாம்:

**வண்ணமயம்!**

**கலைநயம்!! உள்ளடக்கக் கனதி!!**

**ரூபன் சிவராஜா (நோர்வே)**


'சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland




aaDaa Finance 0798000100
079 8000 100 | arulnages@yahoo.com
finma :34598 cicero :25605

மங்கல இசைக்குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர்
குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்




N.K.Raguraman
Dresdener Str.6 50126
Bergheim
Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240


டாக்டர் ராஜ்குமார் பாரதி


பேராசிரியர் சி.மௌனகுரு


பேராசிரியர் சி.வி.சந்திரசேகர்

# திவ்யாவின் கலை ஆளுமைகள் பற்றி கலாவித்தகர்கள்!

## திவ்யாவைப் பற்றி எனக்குக் கவர்ந்த விஷயங்கள்

1. பழையதையே போட்டு அடிக்காமல் புதிது புதிதாக ஏதேனும் செய்ய வேண்டும் என்னும் பேராவல். அதே நேரத்தில் அது பழமையை, பாரம்பரியத்தைப் புறக்கணிப்பதும் அன்று. பழையதன் அழகுக்குக் கறை படியாமல் மேலும் அழகு சேர்ப்பது
2. ஒன்றைச் செய்வது என்று முடிவெடுத்தால் அதில் ஆழப் புகுந்து, ஆய்ந்து, கலந்து செயல்படுவது
3. அவளிடம் இருக்கும் அந்த நடனமாக்குத் திறன். இசையோடு கைகோர்த்துப் போகும் நடன அமைப்பு
4. அவளிடம் உள்ள அபாரமான இசை அறிவு, தாள ஞானம்
5. அவளது தமிழ்க் காதல்

**டாக்டர் ராஜ்குமார் பாரதி**
**(மகாகவி சுப்ரமணிய பாரதியின் கொள்ளுப் பெயரன்)**

## நாட்டிய வெறி கொண்டு கற்பவர்!

நாட்டிய வெறி கொண்டு 2005 ஆம் ஆண்டில் இருந்து என்னிடம் நடனம் கற்று வருகிறார். திவ்யாவிடம் நிறைந்த குருபக்தி உண்டு. நான் கற்றுக்கொடுத்ததை பல மடங்காக்கி செயல்படுகிறார் என்றால் அது அவரது உழைப்பும் தேடலும் தான். இசை அறிவு, லய ஞானம், நெறியாள்கை, கற்பித்தல், நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து வழங்கல், நாட்டிய நாடகங்கள் தயாரித்தல் என பல விடயங்களில் ஆளுமை கொண்ட கலைஞர்கள் அரிது. அதில் திவ்யா தனித்துவம் வாய்ந்தவர்.

எனது 80 ஆவது அகவை சிறப்பு நிகழ்வினை இலங்கையில் ஒழுங்கு செய்து,எனது ஆற்றுகையையும், அவரது மாணவர்களின் ஆற்றுகையையும் ஒரே மேடையில் வழங்க ஏற்பாடு செய்திருந்தார். எனது வாழ்க்கை வரலாற்றினை நாட்டிய நாடகமாக்கி என் முன் மாணவர்கள் ஆற்றுகை செய்து குரு சமர்ப்பணமாக வழங்கினர். நெகிழ்ச்சியான தருணமாகியதோடு திவ்யாவின் வளர்ச்சி கண்டு மிக மகிழ்ந்தோம்.

**"பத்மபூஷன் " பேராசிரியர் சி.வி.சந்திரசேகர்**

## திவ்யாவிடம் எனக்கு கவர்ந்த பல விடயங்கள் இருப்பினும் முக்கியமாக 3 விடயங்களைக் குறிப்பிடுகின்றேன்.

ஒன்று மரபு மாறாது புதியன புனையும் கலைஞர் திவ்யா.அரைத்த மாவையே மீண்டும் மீண்டும் அரைத்து அலுப்புத் தட்ட வைக்கும் இன்றைய கால அரங்கேற்ற சடங்குகளில்,திவ்யா படைக்கும் அரங்கேற்றங்கள் முற்றிலும் வித்தியாச மாக புதிது புதிதாக கலை அனுபவத்தைத் தருகிறது.

இரண்டாவது,அவரது துறையில் அவருக்கு இருக்கும் ஆழமான அறிவும், தேடலும். குறிப்பாக அவர் நட்டுவாங்கம் இசைப்பதிலும் வல்லுநர். தாளம், ஜதி விடயங்களில் விரிந்த அறிவு இருப்பதோடு அவரிடம் கற்பித்தல் ஆற்றலும் சிறப்பாக உண்டு. அவரோடு இணைந்து கூத்து- பரதம் ஜதிகளில் செயற்பட்டுள்ளேன்.

மூன்றாவது, பழகுவதற்கு மிக இனிமையான கலைஞர். யாரைப் பற்றியும் குறை கூறுவதோ,அநாவசிய பேச்சுகளோ அவரிடம் இருக்காது. அதே சமயம் எதையும் அவரிடம் சுதந்திரமாக உரையாடலாம். பாரதியின் தீவிர பக்தையாக உலகத்திடம் அன்பு கொண்டு வாழ்கிறார் போலும்.

**பேராசிரியர் சி.மௌனகுரு**



# தாலாட்டும் தன்னிறைவும்

**எமது சமூகக் கட்டுமானத்தில் குழந்தையை நிலத்திற் கூட விழுந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்**

அனைத்து உயிரினங்களும் போலவே மனிதனுக்கும் தன் குழந்தைகள் மீது அளப் பெரும் பாசம், அன்பு, பிணைப்பு எல்லாம் இயற்கையாகவே உண்டு. மனிதர்க ளில், பெற்றோர்கள் எப்போதும் தம்மால் முடிந்தவரையில் தமது குழந்தைகளுக்கு வேண்டியவற்றை எல்லாம் அல்லது அநேகமானவற்றைத் தர முயற்சிப் பதும். தமது குழந்தைகளைப் பாதுகாப்பாக சில சிறுகட்டுரைகள், கவிதைகள் என்பவை யும் அதிற் கூறப்பட்ட கருத்துக்களும் மேலே சுட்டிக்காட்டப்பட்ட பெண்ணின் கருத்துக்களையும் அதன் விளைவுக ளையும் தொடர்பு படுத்தியிருந்தன. அத்தோடு அவை தொடர்பாக எனக்கு சில யோசனைகளையும் உருவாக்கி யிருந்தன. அதன் விளைவாக எழுந்த சிந்தனைகளும் கருத்துக்களுமே இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன. இங்கு

குழந்தைகள் வளர்ந்து, தொழில் சார்ந்து, கல்வி சார்ந்து, தமது வாழ்வு சார்ந்து தனியாக வாழப் போன பின், எமது சமூகத்தில் மனத்தளவில் அதிகமாகப் பாதிக்கப்படுவது தாயார் தான். தாய் மட்டுமல்ல தந்தையும் கூட அந்தக் காலப் பகுதியை இழந்த ஆதங்கம்,குழந்தை களை நினைத்து வருந்துவது போன் றவற்றை அனுபவிப்பது வழமை. எமது சமூகக் கட்டுமானத்தில் ஒரு குழந்தையை தருவதாய் இருக்கிறது. சமூக வலை த்தளம் ஒன்றில், ஒரு பதிவில் ஒருவர் தானும் தன் துணைவியும் தமது குழந்தை கள் வளர்ந்து வீட்டை விட்டுப் போன பின் எவ்வளவு தூரம் மனம் இடிந்து போய் இருக்கிறார்கள் என்பதை ஒரு சோகமான கவிதையில் அழுது தீர்த் திருந்தார். அக்கவிதையின் படி, தமது வீட்டில் ஒவ்வொரு பகுதியும்,குழந்தைகள் இல்லாததால் எவ்வாறு எந்தச் சத்தமும் இன்றி அமைதியாய்ப் போய் இருக்கிறது என்பதில் இருந்து,அவர்களுக்குத் தேவை யானதைப் பார்த்துப் பார்த்து சமைத்த தமது அடுப்படி எப்படி ஓய்ந்து போய் விட்டது என்பது வரை மிகவும் சோகமாக எடுத் துரைத்திருந்தார்.முக்கியமாகத் தன் மனைவி இப்போதெல்லாம் எப்படி தனித் துப் போயிருக்கிறார் என்பதைத் தனியாக எழுதியிருந்தார்.

இப்படியான காலகட்டத்தில் குழந்தை கள் இல்லாத வீட்டின் தனிமையும் இனி தமது நேரத்தை எவ்வாறு செல வழிப்பது என்று தெரியாததாலும் தாய்மார்களுக்கு



வளர்த்தெடுக்க வேண்டும் என இயல்பாக நினைப்பதும் வழமை. இருந்தாலும் இந்தப் பாசத்தை அதீதமாக வளர்த்துக் கொண்டு, தமது குழந்தைகளின் சுதந்தி ரத்தையும் அவர்களின் தனித்துவம், வளர்ச்சியையும் பாதிக்கும் வகையில் பெற்றோர்கள் செயற்படுவது துயரம் மட்டுமல்ல,குழந்தைகளின் எதிர்காலத் தையும் பாதிக்கும் செயல் என்றும் கூடக் கூறலாம்.

”நான் வேலைக்குப் போவதில்லை, என் குழந்தைகளைக் கவனிக்கத்தான் நேரம் சரியாகவுள்ளது” என்பதை ஒரு பெண் கூறக்கேட்டபோது,அப்பெண்ணி ற்குச் சிறு குழந்தைகள் இருக்கிறார்கள் போலும் என எண்ணிக் கொண்டேன். பின்பு அவருடன் பேச நேர்ந்த போது தான் புரிந்தது, அவரது குழந்தைகளுக்கு வயது முறையே பதினெட்டும் இருபதும். இவர்களுக்கு உணவு ஊட்டி,அவர்களு க்கான தேவைகள் எல்லாவற்றையும் தான் பார்த்துப் பார்த்து செய்து கொடுப் பதாக மிகவும் பெருமையுடன் கூறிக் கொண்டார். அதன் காரணமாகவே தான் வேலைக்கோ படிப்பதற்கோ போவதி ல்லை எனவும் கூறினார்.

கடந்த சில வாரங்களின் முன்பு சமூக வலைத்தளங்களில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடும் விடயங்கள் முக்கியமாக புலம் பெயர் நாடுகளில் வாழும், வேலை களுக்குப் போகாமல் இருக்கும் எம்மவ ர்களுக்குப் பொருந்தி வந்தாலும் கூட,புலத்திலிருக்கும் எம் உறவுகளுக் கும் இது சில வேளைகளில் பொருந் தக் கூடும். குழந்தைகளை சிறு வயது முதலே இயன்றவரை பெற்றோர்களில் தங்கியிருக்காமல் அவர்களது தேவை களை அவர்களே நிறைவு செய்யும்படி வளர்ப்பது இன்றியமையாதது. அல்லாது போனால் அவர்கள் பாடசாலையில் தமது கல்வி, விளையாட்டுத் துறை சார்ந்த விடயங்களில் மட்டுமல்ல,தாம் வாழும் சமூகம் சார்ந்த விடயங்களிலும் பின் னடைந்து போவர்.



பூங்கோதை
(இங்கிலாந்து)

நிலத்திற் கூட விழுந்து விடாதபடி பார் த்துக் கொள்ள வேண்டும் என்றும், விழுந்தால் அது அநேகமாகத் தாயாரின் கவலையீனத்தால்த் தான் நடந்திருக்கும் என்பது போலவும் தான் எதிர்பார்ப்புகள் கட்டி எழுப்பப் பட்டிருக்கின்றன. இதன் காரணத்தினாலேயே அதிகமான பெற் றோர்,முக்கியமாகத் தாய்மார் குழந்தைக ளின் சகல தேவைகளையும் அவர்களைச் செய்ய விடாமல் தாமே செய்து கொடுக்கி ன்றனர்.

இது நம் எல்லோருக்கும் தெரிந்த ஒரு விடயம் என்று எடுத்துக் கொண்டால், இத்தோடு தொடர்புடைய இன்னொரு விடயம் எனக்கு ஆதங்கத்தைத் வீண் மனவேதனை,மன உளைச்சல் போன்றவை ஏற்படு கின்றன. தாயகம் போல இங்கு எல்லாக் குழந்தைகளும் தாம் திருமணம் செய்யும் வரையும் பெற் றோர்களோடு இருப் பதில்லை.

இதனை மனதில் வைத்து தாய்மார் கள் தமது குழந்தைகள் பள்ளியில் கற்கி ன்ற காலப்பகுதியிலேயே தாமும் தமக் குப் பிடித்த ஒரு துறையில் தமது தகை மைகள்,அனுபவங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.அவை கட்டாயமாகக் கல்வித்துறையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை.

28 ஆம் பக்கம் பார்க்க...





# பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்!

## மீறுகையில் அடங்காதவள், திமிர் பிடித்தவள் என்று அடையாளப்படுத்தப்படுகிறாள்



பிரியா
பாலசுப்பிரமணியம்
(இலங்கை)

உலக சனத் தொகையில் குறிப்பிடத்தக்க பகுதியினர் பெண்களாக இருப்பதனால் சித்ரவதை, பட்டினி, பயங்கர வாதம் உளரீதியான பாதிப்பு, அங்கவீனம் கொலை ஆகியவற்றுக்கு ஆளாகின்றனர். பெண் வெறும் போகப் பொருளாகவும் வீட்டின் வேலைகளை பார்க்கும் இயந்திரமாகவுமே பயன்படுத்தப்படுகிறாள். குழந்தை பெற்றுக் கொள்வதையும் அவர்களை வளர்த்தெடுப்பதையும் அவள் விருப்பு வெறுப்புகளையறியாது கட்டாயக் கடமையாக அவளுக்குள் இச் சமூகம் திணித்து வைத்துள்ளது. கணவனை இழந்தால் விதவையென்று ஒதுக்கி அவளை தனிமைப்படுத்துவதும் எந்த நல்ல காரியத்திற்கும் முன் நிற்க விடாமல் தடுப்பதும் மேலும் அவளை சுயமாக தனித்து செயற்படவோ அல்லது முடிவுகளை எடுக்கவோ அனுமதிப்பதுமில்லை. அவ்வாறு அவள் சுயமாக செயற்பட முற்படுகையில் சமூகத்தின் பார்வையில் அடங்காதவளாகிப் போகிறாள். பெண் என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளோடு வளர்த்தெடுக்கிறார்கள் பெற்றோர்கள். அவள் அதை மீறுகையில் அடங்காதவள். திமிர் பிடித்தவள் என்று அடையாளப்படுத்தப்படுகிறாள்.

பெண்ணின் சுதந்திரத்தை அவள் தீர்மானிக்கும் சுதந்திரம் நம் சமூக அமைப்பில் பெண்ணுக்கு இருப்பதில்லை. பெண் தான் விரும்பிய துணையை தேர்வு செய்யவும் அல்லது ஏதேனும் முடிவெடுக்கும் உரிமையானது பெரும்பாலும் ஆணினுடையதே ஏனெனில் ஒரு தந்தையாக அல்லது பாதுகாவலனாக எல்லாவற்றையும் முடி வெடுக்கின்ற தன்மை ஆணிடமே காணப்படுகிறது.

தம் தேவை கருதி வீட்டுக்குள் இருந்த பெண்களிடமிருந்து மெதுமெதுவாக போகம் அனுபவிக்கத் தொடங்கிய ஆண்கள் ஒரு காலகட்டத்தில் பெண்களை வெறும் சுகபோகத்திற்கும் தம் தேவைகளை நிறைவேற்றுபவர்களாகவும் பாவிக்கத் தொடங்கி விட்டார்கள். மன ரீதியாக அவளுக்குள் தாக்கத்தைக் கொடுத்து பெண்களை அடிமைப்படுத்தினர். இதனால் வீட்டுக்குள்ளேயே இருந்து இருந்து பழகி அதிலிருந்து விடுதலை பெற முடியாத பெண்கள், தாம் வீட்டுக்குள் முடங்க வேண்டியவர்கள்தான் என்று நினைத்து விட்டார்கள். அடங்கி அடங்கியே வாழ்ந்ததால் தாம் அடங்க வேண்டியவர்கள்தான் என நினைத்து தமக்குத் தாமே அடிமைச்சங்கிலியை பூட்டிக் கொண்டார்கள்.

இதற்கெல்லாம் பதில் காண எழுந்ததே பெண்ணியக் கோட்பாடு மேலைத்தேய நாடுகளில் ஆரம்பித்து எல்லா இடங்க ளிலும் பரவத்தொடங்கியது. பெமினிஷம் Feminism எனும் ஆங்கிலப் பதம் தமிழில் பெண்ணியம் என்றழைக்கப் படுகிறது. இச் சொல் 1890 இலிருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும் பெண்ணுரிமைகளை பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது. 20 ஆம் நூற்றாண்டிலேயே இச் சொல் பெரு வழக்காக மாறியது. பெண்ணியமென்பது பெண் என்பவள் ஆணுக்கு நிகரானவளே எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும் அடக்கி வைக்கப் படக் கூடாது என்ற கருத்துக்களை முன் வைக்கிறது. பெண் அவளது விலங்குகளிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்பதே பிரதான நோக்காக கொண்டமைந்துள்ளது. மெல்ல மெல்ல எழத் தொடங்கிய பெண் விடுதலை பற்றிய குரல்கள் மிகத் தீவிரமாகவும் வலிமையாகவும் பரவத் தொடங்கியதுள்ளது.

உலகம் முழுவதும் பால் நிலை பாகுபாட்டின் காரணமாக குடும்பம்,சமூகம், மதங்கள், அரசு போன்ற நிலைகளிலும் அடிப்படை உணவு, போசாக்கு, சுகாதார வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு, கூட்டம், தலைமைத்துவம் ,தீர்மானம் எடுக்கும் பதவிகள் போன்ற சகல அம்சங்களிலும் பெண்களுக்குப் பாராபட்சம் காட்டப் படுகிறது. இதனை கருத்திற் கொண்டு அதனை மாற்றுவதற்கான சிந்தனையும் செயற்பாடுமே பெண்ணிய வாதமாகும்.

பெண்ணுக்கு பெண் விடுதலை பற்றி அல்லது அது என்ன என்பதில் தெளிவு உண்டா எனில் முன்பை விட கூடுதலென்றே கூறமுடியும். கல்வியறிவு மற்றும் சமூக அரசியலில் பெண்ணுக்கும் சம உரிமை உண்டு என்ற அளவுக்கு சிந்தனை செய்யக் கூடிய பெண்கள் அதிகதிகமாய் உருவாகுகிறார்கள்.குடும்பம் என்ற அமைப்பு பெண்ணை அடிமையாகவே வைத்திருந்தது. நீ இப்படித் தான் இருக்க வேண்டும். இதைத்தான் செய்ய வேண்டும் என்று நியதிகளோடு அவளைச் சிறை வைத்திருந்தது. காலங் காலமாக பெண் அதையே பின்பற்றி அதுவேயாகி காணாமல் போனாள். ஆனால் இன்று எல்லாத்துறைகளிலும் பெண்கள் பங்கேற்கிறார்கள். தமது இருப்பை உணர்த்த போராடுகிறார்கள். முன்னைய காலங்ளோடு ஒப்பிடுகையில் தங்களுக்கான உரிமை வேண்டி மிகத் தீவிரமாக செயற்படத் தொடங்கியிருக்கிறார்கள்.

முன்னையகாலத்தோடு ஒப்பிடுகையில் பெண்களின் மீதான அடக்குமுறைகள் மிக குறைந்துள்ளது.சமூகம் ஒரு ஆணையும் பெண்ணையும் எவ்வாறு ஏற்றுக் கொள்கிறது பெண்ணின் சுதந்திரம் எதுவரை வரையறை செய்யப்பட்டுள்ளது.

எங்கெல்லாம் பெண் மறுக்கப்படுகிறாள் என்பவை பற்றி பேசத் தொடங்கியிருக்கிறார்கள். பெண்ணியம் என்ற வார்த்தை பரிச்சயப்பட்டிருக்கிறது.தான் விரும்பியவற்றை சுயமாக செய்யவும் . விருப்பமற்ற திருமண உறவை விட்டு விலகவும் மறுமணம் செய்யவும் துணிந்துள்ளனர்.அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் தமக்கு ஏற்படும் அசௌகரியங்களை தயங்காது வெளிப்படுத்துகிறார்கள்.தமக்கு ஏற்படும் பாலியல்ரீதியான பிரச்சினைகளை பற்றி வெளிப்படை யாக சமூக வலைத்தளங்களிலும் பிற ஊடகங்களிலும் முன்வைக்கிறார்கள். கல்விரீதியாக பெண் பலப்படுகின்ற போது அவள் தெளிவாகிறாள். தனக்கான தேவைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் தயக்கமின்றி வெளிப்படுத்தவும் கேள்வி கேட்கவும் துணிகிறாள். பெண்விடுதலையென்பது வெறும் வார்த்தை ஜாலங்களில் அன்றி செயலிலும் இருக்க வேண்டும்.பெண் அதற்கு துணிய வேண்டும்.அவள் தன்னை மனதாலும் உடலாலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.தன் உரிமைகள்பற்றி கற்றுணர வேண்டும். ""அடைபட்டு கிடக்கும் பறவைகள் சிறகினை விரித்து பறக்கும் காலம் தூரமில்லை""

GASTSTÄTTE
WICKE
BEHAGLICH - FAMILIÄR
OUR SERVICES
-Decoration
-Videography
-Photography
-Icing cake
-DJ
-LED écran

உங்கள் வைபவங்கள் சிறக்க எமது சேவைகள்!
Decoration, Party service, makeup
அனைத்து விதமான கொண்டாட்டங்களுக்கும்
மண்டப அலங்காரங்களுக்கும் (Decoration) நாடுங்கள்.



Party Service
உங்கள் வைபவங்கள் சிறக்க இலங்கை இந்திய
ஜேர்மன் உணவுகள்கேக் வகைகள் செய்து தரப்படும்.
தொடர்புக்கு: 00491631992333

இவற்றுடன் தரமான மேக்கப் கமரா சேவைகளும் உண்டு.





# கூடுவிட்டு கூடுபாய்வது போல்! அவர்களை நாமாக வரிந்துகொண்டு!! அவர்களாகவே வாழ்ந்து அனுபவம் காண்பது என்பது ஒரு கலை!!!

ஒரு நாட்டவர்களது, ஒரு இனத்தவர்களது, பழக்கவழக்கங்களை நாம் அறிவதென்பது, ஒரு உன்ன தமான அனுபவம். தாய்லாந்து,போனால் அவர்கள் அணியும்,மாலையைப் போட்டுபடம் எடுப்பதும்,அவர்களது தொப்பியை, அணிவதும், அதனை முகப்புத்தகத் தில் பகிர்வதும்,மட்டும் அவர்களது, பண்பாடுகள்,வாழ்க்கை முறமைகளை முழுமையாக பார்த்த தாக,எண்ணிவிட முடியாது. இங்கே ஒப்பீட்டு அளவுகோலை முதலில் புறந்தள்ளி வைத்து விட்டு, கூடுவிட்டு கூடுபாய்வது போல் அவர்களை நாமாக வரிந்துகொண்டு அவர்களாகவே வாழ்ந்து அனுபவம் காண்பது என்பது ஒரு கலை.

இந்தக்கலை எமது வாழ்வியல் முறைகளில் மிகவும் குறைவாகவே உள்ளது. அதற்கு காரணம் நாம் எந்த நாட்டுக்கு விடுமுறைக்கு சென்றாலும்,உணவைத்தவிர ஏனையவற்றை அழகிய கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்து, வெளியில் அவர்களது வாழ்கையை பார்க்கும் பார்வையாளர்களாக மட்டுமே நாம் இருப்போம். எந்த நாடாக

## பருத்தித்துறை வடையும் பிரித்தானிய தம்பதிகளும்!



● மாதவி

இருந்தாலும் பிற நாட்டவர்கள் தாம் விடுமுறைக்கு செல்லும் நாடுக ளின் கலாச்சாரங்களை ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று ஓர் இரு நிகழ்ச்சியை பார்த்து



யாவும் பார்த்தோம் என்ற மனநிலையில் திரும்புவர். இங்கு நான் குறிப்பிடும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மாக் ஜனற், ஜெலண்ட் தம்பதியினர்இலங்கையில் வட பகுதிக்கு சென்று பருத்தித்துறை நகரில் 3 வாரம் தங்கி வந்துள்ளார்கள். அவர்களும் வேட்டி, சேலையுடன்,நின்று படம் எடுத்துப்போட, அதற்கு 1000 லக்குகள் குவிய நிமிர்ந்து பார்த்தேன்.

ஒன்றில் இவர்கள் ஒரு தமிழ் குடும்பத்தின் சம்மந்தியாக இருக்க வேண்டும், அல்லது இவர்கள் ஆடைப் பிரியர்களாக



தேங்காய்யின் சுயரூபத்தை கண்ட, காட்டிய மகிழ்வில் இவர்கள், பருத்தித்துறை 2023





இருக்கவேண்டும் என்று எண்ணினேன். அதுமட்டுமல்ல ‘அட நாம் ஆங்கிலேயர்களின் ஆடையுடன் வெளிநாடுகளில் மட்டுமல்ல,தாய் நாட்டிலும் வலம் வருகிறோம், அதற்காக எவரும் எம்மைப் படம் எடுத்து போட்டு லக்குகள் குவித்ததாக நான் அறியவில்ல“ என மனதுக்குள் கிண்டலும் அடித்துக்கொண்டேன்.

31 ஆம் பக்கம் பார்க்க...

Münster க்கு அருகாமையில் Warendorf நகரில்....
RESTAURANT
Westfälischer Hof
Saal Und Restaurant!
Telefon: +49 2584 9348481



Bartholomäusstraße 29, 48231
Warendorf, Germany
Öffnungszeiten: Geöffnet . Schließt um 23:00| Telefon: +49 2584 9348481

உங்கள் நிகழ்ச்சிகளை அழகுடனும் சுவையுடனும் செய்திட
எமது மண்டபம் அழைக்கிறது
பிறந்த நாள், நத்தார் தினக் கொண்டாட்டம், திருமண விருந்து
மற்றும் எந்தச் சிறப்பு நிகழ்வுகள் என்றாலும் எம்மிடம்
உணவு சிற்றுண்டிகள் உட்பட யாவும் செய்து தருகின்றோம்.
விருந்தினர்கள் விளையாட Kegelbahn ம் உண்டு.
அழகிய மண்டபம் தொடர்புகளுக்கு 01794855554
Restaurant 60 Sitzplätze | Kegelbahn 30 Personen
Biergarten kann 200 Plätze
Saal 300 Plätze


## 19 ஆம் பக்கத் தொடர்ச்சி... பாட்டொன்று கேட்டேன்...

அளக்கலாம். ஆராய்ச்சியாளர்கள் அறிந்தது என்னவென்றால் இசையின் தாளம் பொறுத்து நமது உடல் வெவ்வேறு உணர்ச்சிகளை உணர்கின்றது என்பது தான். 72 BPMF அதிகமாக இருக்கும் இசை கேட்கும் போது நாம் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறோம், அதுவே 72 BPMF குறைவாக இருக்கும் இசை கேட்கும் போது நாம் அமைதி ஆகி விடுகிறோம்.

இசையில் இன்னும் ஒரு மிக முக்கியமான விசேஷம் இருக்கிறது. சிறுவர்களின் வளர்ச்சி நேரம் இசை அவர்களின் மூளை விருத்தியைத் தூண்டுகிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் அறிந்துள்ளார்கள். அதுவும் அவர்களின் நுண்ணறிவு எண் எனப்படும் Intelligence Quotient (IQ) அதிகரிப்பதற்கு இசை கேட்டாலே போதும் என்று கூறுகின்றார்கள். எனவே, பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை சிறு வயதினிலேயே சங்கீதம், பியானோ, புல்லாங்குழல், மிருதங்கம் போன்ற ஏதாவது ஒன்றை கற்றுக்கொள்ள விடுங்கள். அவர்கள் மேலும் புத்திசாலிகள் ஆவதற்கு வாய்ப்புகள் உள்ளன. உண்மை சொல்லப் போனால் இப்படி அடுத்து அடுத்தாக இசையினால் நாம் பெறும் பயன்களைப் பற்றி கூறிக்கொண்டே போகலாம்.

## 25 ஆம் பக்கத் தொடர்ச்சி... தாலாட்டும்...

தையற்கலை,சமையற்கலை,சிகை அலங்காரம் போன்ற வருவாயை ஈட்டித்தரும் துறைகளையோ அல்லது தமக்குப் பிடித்த ஓவியத் துறை,எழுத்துத் துறை, நடனம், இசை போன்றவற்றிலோ தமது நேரத்தை மனதிற்குப் பிடித்த விடயங்களில் செலுத்துவது மிக அவசியம். இவற்றோடு தாம் ஒரு புலம் பெயர்ந்த தேசத்தில் இருக்கும் பட்சத்தில், அந்நாட்டின் மொழியைக் கற்றுக்கொண்டு அந்நாட்டு மக்களின் பண்பாடு, கலை,கலாச்சாரத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பல உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. வேலைகளுக்குப் போக விரும்பாதவர்கள் தமது மனத்துக்குப் பிடித்த வழியில் தம்மாலான உதவிகளை இவர்களுக்குச் செய்து கொடுக்கலாம்.

எனக்குத் தெரிந்த சில தாய்மார்கள் இணையவழியில் தமது மேற்படிப்பை தொடர்ந்து கற்று முடித்த பின் அவர்கள் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களானதும், பகுதி நேர வேலைகளுக்குப் போய் தமது நேரத்தை ஆரோக்கியமானதாக மாற்றிக் கொண்டுள்ளார்கள்.அத்தோடு பல்வேறு காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகள் நன்றாக வர வேண்டும் என்று மனமார விரும்புவது நேர்மறை எண்ணங்களை வளர்த்து, எல்லோருக்கும் நன்மை பயக்கும் நிலையை ஏற்படுத்தும்.

## 21 ஆம் பக்கத் தொடர்ச்சி... ஆண்களை மிஞ்சி...

**"ஈங்கு இவன் குறித்த கொள்கை
இது இனி இவனுக்கு ஆகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்
பொதி கழித்து இங்கு உன் பால்
ஆங்கு நின் தாள்கள் போற்றும்
பேய் வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று பரமர்
தாள் பரவி நின்றார்"**

வேறு மனைவியை மணந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கணவன் தன்னைக் கடவுளாக வணங்குங்கள் என்று ஊராருக்குச் சொல்ல இவனுக்காகத் தாங்கிய உடல் தேவையில்லை என்று பேய்வடிவம் பெற்றதாக வரலாறு கூறுகின்றது. அதாவது அயபநசளரஉாவ என்று வேறு ஒரு கட்டுரையில் எழுதியிருந்தேன். இது கடவுள் பற்றினால் என்று எடுத்துக் கொள்ள முடியாது. தோல்வியின் கண் மனமாற்றமே என்று உளவியலாளர்கள் கருதுகின்றார்கள்.

இந்த தைரியம் இக்காலப் பெண்களிடம் மிதமாகவே இருக்கின்றது. நல்ல காரியம் ஆற்ற வேண்டுமானால், துணையுடன் ஆற்ற வேண்டும். துணை விரும்பவில்லை என்றால், உங்களுடைய ஒத்துழைப்புத் தேவையில்லை. என்னால் தனியே காரியமாற்றத் தைரியமிருக்கின்றது என்று செயலாற்றத் தொடங்கிவிடுகின்றனர். பொறுமை, பூமி என்று பெண்ணுக்கு புகழாரம் சூட்டியதால், கவலைகளை மனதுக்குள் போட்டு அடக்கி அடக்கி குடும்பத்தில் என்ன பிரச்சினைகள் இருந்தாலும் மறைத்து வாழ்ந்த பெண்களே இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தார்கள். ஆனால், இன்று நீர்கால்யாத்த நிரைஇதழ்க் குவளை

கோடை ஒற்றினும் வாடா தாகும் (குறுந்தொகை) குவளை மலர்கள் நீரின்றி வாடி மீண்டும் நீர் வரும்போது உயிர்த்து எழுவதுபோல், மாரியில் உறங்கும் மரங்கள் கோடையில் துளிர்ப்பது போல் மீண்டும் எழுவர் பெண்கள். முன்னேற்றப் பாதையில் திருமணம் தடையானால் திருமணம் செய்து வாழ்வதையே வெறுக்கின்றனர். ஆண்களை மிஞ்சி வாழ்வது நோக்கமாக இருப்பதில்லை. ஆண்களைத் தங்கி வாழப் பிடிப்பதில்லை. எதிர்வரும் காலம் பெண்கள் வாழ்க்கையில் சாதனையில் உயர்ந்து செல்ல சிறந்த வழி முறைகளைக் காட்டிக் கொண்டே இருக்கும். அதனால், பெண்கள் எண்ணங்களுக்குத் தடை போடத் தேவையில்லை.

## 11 ஆம் பக்கத் தொடர்ச்சி... பெண் தொழில் முனைவோர்...

"படிச்சிருந்து என்ன செய்ய... வீட்டை விட்டு வேலைக்குப் போக அனுமதியில்லை' எனப் படித்த பெண்களும்,"படிப்பும் இருக்கு. ஏதாவது தொழில் செய்யவேண்டும் என்கிற எண்ணமும் உண்டு. வழிதான் தெரியவில்லை' எனப் புலம்புகிற பெண்களும் நம்மிடையே பரவலாக உண்டு. ஒரு வண்ணத்துப்பூச்சி ஆக வேண்டும் என்ற அடக்க முடியாத ஆவலில் ஒரு கம்பளிப் புழு தன் இறக்கைகளை வளர்த்துக் கொள்வதற்காக தன்னை சுற்றி ஒரு கூட்டை நெய்து கொள்கின்றது என படித்திருக்கிறோம் இல்லையா? அதைப்போலத்தான் பெண்களாகிய நாமும் பொருளாதாரம் ஈட்ட வேண்டுமென்றால் தன்னம்பிக்கை, தொழிற் பயிற்சிகள், விடா முயற்சி, கடின உழைப்பு போன்றவற்றால் மனசுக்குள் வைராக்கியத்தை ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்பது தவிர்க்கமுடியாதவொன்று. நம்மில் பெரும்பாலோர் நம்மை பற்றி சுய மதிப்பீடு செய்வதில்லை,அப்படியே செய்தாலும் ஒன்று நம்மைப் பற்றி மிக தாழ்வான அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்கிறோம். அல்லது மிதமிஞ்சிய அளவுக்கு நம் திறமையின் மீது நம்பிக்கை வைத்து எனக்கு ஈடு எவரும் இல்லை என்று கூறிக் கொள்கிறோம்.இந்த இரண்டு நிலையையும் இல்லாமல் நடுநிலையோடு நம்மை நாமே சுய விமர்சனம் செய்து,நமக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளைத் தூசித்தட்டி வெளிக்கொணர்ந்து, உண்மையான உழைப்பை முதலீடாக்கினால் வெற்றி நிச்சயம். நம் திறமையை இனம் காண வேண்டியது செல்வத்திலும் வெற்றியிலும் அல்ல,நம்முடைய தளராத உழைப்பிலும், முயற்சியிலும். எது எவ்வாறாயினும் முன்பைவிட அதிக அளவில் பெண்கள் விதவிதமான வணிகத்தில் ஈடுபட முன்வந்திருப்ப தென்பது மிகவும் ஆரோக்யமான விடயமே. பெண்களின் சுயசம்பாத்தியம் கொடுக்கும் தன்னம்பிக்கை யும் தைரியமும் இந்த உலகில் எதற்கும் ஈடிணையற்றது என்றே கூறவேண்டும்.

## 05 ஆம் பக்கத் தொடர்ச்சி... அரசியலில்...

பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களையும் துளைத்து எடுத்தார். இவரது காலத்தில் கொழுந்து விட்டெரிந்த IRA IRISH பயங்கரவாதிகள் இவரையும் அமைச்சர்களையும் ஒட்டுமொத்தமாக கொன்றுவிட செய்யப்பட்ட சதியிலிருந்து உயிர் தப்பினார்.

1990இல் நடந்த கட்சித் தலைவி தேர்தலில் இவரது ஆண் சகாக்களே பொறாமையால் இவரைக் கவிழ்த்து துழாெ ஆயதழச என்பவரை கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் தெரிவுசெய்தார்கள். அன்று இலண்டன் டவுனிங் தெரு 10ஆம் இலக்க பிரதமர் இல்லத்திலிருந்து கடைசித் தடவையாக மார்கிரெட் தாச்சர் வெளியேறும்போது கண்களில் கண்ணீர் இருந்ததை பலர் கவனித்தார்கள். அதேபோல, நியூசிலாந்து பிரதமர் ஜனவரி மாதம் 24ஆம் திகதி கடைசியாக வெளி யேறும்போது, அவரை நேசித்த மக்கள் அவரை கட்டி அணைத்து கண்ணீர் சிந்தி வழி அனுப்பினர்.

இலங்கையில் கணவனை இழந்த கைம்பெண், அரசியலுக்குப்புதிய ஸ்ரீமாவோ – 1960களில் இலங்கையின் பிரதமராகவும், உலகின் முதலாவது பெண் பிரதமராகவும் பதவியேற்றார். தரப்படுத்தல், சிங்களம், ஆட்சி மொழி இப்படி பல இன்னல்கள் தந்த ஒரு கட்சியான, சுதரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க. ஆனால் அவர்கள்,பொருளாதாரக் கொள்கையில் சிறப்பாக இருந்தார். இலங்கையில் செழிப்பாக வளரும் மிளகாய், வெங்காயம் போன்ற பலவற்றை இறக்குமதி இன்றி தன்னிறைவு கொள்ளவைத்தவர்.

அவரது எதிராளிகளும், சொந்தக் கட்சியினரும் அவரது குடியுரிமை களை பறித்து அவரை ஒரு செல்லாக்காசாக்கி விரட்டிவிட்டார்கள். இன்று ஒட்டுமொத்த இலங்கையிலும் அறகலய,ஆர்ப்பாட்டம், பணநெருக்கடி, நாட்டின் பொருளாதாரமே வங்குரோத் தாகி நிற்கிறது! ஏனென்று யாரும் ஆராய்வார்களா? ஒரு குடும்பத்தலைவி கண்ணீர் வடித் தால் அந்தக் குடும்பம் உருப்படாது என்று சொல்வார்கள். ஒரு நாட்டின் தலைவி கண்ணீர் வடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டால் அந்த நாடு உருப்படாது என்பது என் கருத்து. 1990களில் பிரிட்டனில் ஆளும் கட்சியாக இருந்த மார்கிரெட் தாச்சரின் கம்பீரமான கன்சவேடிவ் கட்சி எங்கே? இன்று 2023இல் பிரிட்டனில் ஆளும் கட்சியாக இருக்கும் போறிஸ் ஜோன்சன், ரிஷி சுனாக் ஆகியோரின் கன்சவேடிவ் கட்சி எங்கே?






மகளிர் தின வாழ்த்துக்கள் ( பங்குனி 08)

# தமிழ்மன்றம் பிராங்பேர்ட்டின் 34 ஆவது ஆண்டுவிழா












தமிழ்மன்றம் பிராங்பேர்ட்டின் 34வது ஆண்டுவிழாவானது 28.01.2023 அன்று பிராங்பேர்ட் நகரில் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது. விழாவின் மங்கல விளக்கை இளம் தம்பதியினர் கீர்த்தனா சைலன் அவர்களும், அவர்களுடன் மன்றத்தின் உபதலைவர் சிவகுமார் தம்பதியினர் ஏற்றிவைக்க விழாவின் முதல் அங்கமாக வரவேற்பு நடனமும் அதனைத்தொடர்ந்து தளிர்கள் என்ற நிகழ்வும் நடந்தேறியது. இந்நிகழ்வானது அடுத்தத்தலைமுறை கலைஞர்களான எம் மழைலயர்கள் சிறப்பிக்கும் நிகழ்வாக அமைந்தது இரட்டிப்பு மகிழ்வானது.

அதனைத்தொடர்ந்து சாரங்காஸ் இசைக் குழுவின் இசைச்சாரல் மழை பொழிந்தது. பிராங்போர்ட் தமிழ் கலைஞர்களின் இனிய குரல்தரும் கீதங்களை நீண்ட இடைவெளிக்குபின் சிறப்பான இசையுடன் கேட்க முடிந்ததானது பலரது செவிகளுக்கு விருந்தானது. அதனைத்தொடர்ந்து பரத நிகழ்வுகள், நடனங்கள்,கலைஞர்கள் கௌரவிப்பு என்று நடந்தேறி இறுதியில் எமது பாரம்பரிய கலைகளில் ஒன்றான இராவணன் அவையென்ற கூத்தோடு நிறைவுபெற்றது. கொரோணா காலத்துக்குப் பின் நல்லதொரு நிகழ்வோடு தமிழ்மன்றத்தின் 34வது ஆண்டுவிழா நிறைவுபெற்று மன்றம் தனது 35தாவது ஆண்டில் தன் பணிகளை சிறப்பாக தொடரவிருக்கின்றது. ■

# யேர்மனி தமிழ் கல்விக்கழகம் பிராங்போர்ட் 28 வது வருட நிகழ்வும் கேம்பிறிச் பல்கலைக் கழக (University Of Cambridge) மாணவர்களுக்கான மதிப்பளிப்பும்

**செண்பகன்**

யேர்மனி தமிழ் கல்விக்கழகம் பிராங்பேர்ட்டுடன் இணைந்து செயற்படும் தமிழாலயங்கள் ஒன்று சேர்ந்து தமிழாலய 28 வது ஆண்டு விழா 21.01.2023 சனிக்கிழமை பிராங்பேர்ட் நகரில் சிறப்பாக நடைபெற்றது. மாவீரர்களுக்கும் போரில் மரணமான மக்களுக்குமான அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கேம்பிறிச் பல்கலைக் கழகம் (University Of Cambridge) யேர்மனியில் 2020,2021,2022ம் ஆண்டு நடாத்திய தமிழ்மொழிக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரத் தேர்வில் தோற்றி,சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப் பளிப்பு, தமிழ்க் கல்விக்கழகம் பிராங்பேர்ட் தமிழாலயத்தில் 2021, 2022 (International Tamil Educational Cultural Scientific Development Federation) நடாத்தப்பட்ட அனைத்துலகப் பொதுத்தேர்வில் வளர் தமிழ் 12 (உயர்தரம்) சித்திபெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு, தமிழ்த் திறனாய்வுப் போட்டி 2022ல் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் பரிசளிப்பு ஆகியவற்றுடன் நடனம், நாடகம்,கவிதை,பேச்சு ஆகியவற்றுடன் வெகு சிறப்பாக நடை பெற்றன.




பிரதம விருந்தினராக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் யேர்மனி ஒருங்கிணைப்பாளர் திரு கந்தையா. சுப்பிரமணியம் அவர்களும்,சிறப்பு விருந்தினர்களாக நாடுகடந் தமிழீழ அரசாங்கம் பேர்லின் உறுப்பினர் திருமதி ஞானகௌரி கண்ணன், அவர்களும், பிரான்ஸ் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யேர்மனி நாட்டின் பொறுப்பாளர் திரு. லோ.வலன்ரையின் அவர்களும் இணைந்து சிறப்பித்தனர். தமிழ்கல்விக் கழகம் பிராங்பேர்ட்டால் வெளியிடப்பட்ட 2023,2024,2025 ஆம் ஆண்டு கேம்பிறிச் பல்கலைக்கழகம் (University Of Cambridge) தமிழ் மொழிக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரத் தேர்வு பாடவிதானம் (Cambridge International A Level Tamil Syllabus)

வெளியிட்டு வைக்கக்கப்பட்டது.



15 ஆம் பக்கத் தொடர்ச்சி...




# பாலின சமத்துவமும் இலங்கையும்

## ஆண் குழந்தைகள் பிறக்க வேண்டும் என விரும்பும் மனநிலை முற்றாக மறையவில்லை.

செய்தி ஒன்று, இலங்கையில் நான்கில் ஒரு பெண் பௌதிக அல்லது பாலியல் வன்முறைக்கு உள்ளாவதை உறுதிப் படுத்துகிறது. அத்துடன் 2019 ம் ஆண்டு நடாத்தப்பட்ட UNFPA ஆய்வு ஒன்று 90% பெண்கள் வாழ்க்கையில் ஒருமுறையேனும் பொதுப் போக்குவரத்துகளில் பாலியல் ரீதியான தொல்லைகளைச் சந்தித்து உள்ளதாகவும் கூறுகிறது. தசாப்த காலங்களாகத் தொடர்ந்த ஆயுத யுத்தம் பாலியல் துஷ்பிரயோகங்களை அதிகரிக்கச் செய்துள்ளதுடன், பெண் தலைமைத்துவ குடும்பங்களையும் உருவாக்கி, நிலைமையை பொருளாதார ரீதியாகவும் மோசமாக்கி உள்ளது.

கோவிட் நோய்நிலைமையைத் தொடர்ந்த சமீபத்திய சமூக பொருளாதார நெருக்கடிகள்,வருமான பாதிப்பு மற்றும் விலைவாசி உயர்வு என்பனவற்றால் உருவான மனவிரக்திகள் பெண்களின் மீதான வன்முறைகளை மேலும் உக்கிரமாக்கி உள்ளன. எனினும் அண்மையில் உள்ள பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது, பெண்ணுரிமைகளில் இலங்கையின் நிலை சற்று ஆறுதல் தருவதாக உள்ளது.

உடலாலும்,உள்ளத்தாலும், வார்த்தைகளாலும், பாலியல் மற்றும் சமூக ரீதியாகவும் ஒடுக்கப்படும் பெண்கள் கிளர்ந்து எழுதல் தவிர்க்க முடியாதது.தனது உரிமைகளுக்காகப் போராடும் பெண்ணியவாதி என்பவள் ஆணுக்கு எதிரானவள் அல்ல. ஆணாதிக்கத்துக்கு எதிரானவள் என்பதை இன்றும் நம்மவர்களில் பலர் புரிந்து கொள்வதில்லை. காலாகாலமாக சமுதாயத்தில் வளர்க்கப்பட்டு வரும் ஆண் மேலாதிக்க மனநிலையானது சம உரிமைகளுக்காகப் போராடும் பெண்களுக்கு எதிரான சாய்நிலை ஒன்றினை எப்போதும் கொண்டிருக்கிறது. தமிழர்களின் கலாசாரத்தில் பெண்களின் ஒடுக்குமுறை சற்று அதிகமானது என்றே கூறலாம்.

எமது நாட்டில் பெண்களுக்கான பாதுகாப்பின்மை, படித்து வேலை செய்யும் பெண்களானாலும் கூட திருமணத்தில் எதிர்பார்க்கப்படும் பெருந்தொகையான சீதனம், கணவனை மீறி எதையும் செய்ய முடியாத மன அழுத்தம், குழந்தை வளர்ப்பு சமையல் உட்பட்ட குடும்பப் பொறுப்புக ளில் சுமத்தப்படும் அதிக வேலைப்பளு, திருப்தியற்ற மணவாழ்வாயினும் நின்று நிலைக்க வேண்டும் என்ற சமூக நிர்ப்பந்தம், விதவைகள் விவாகரத்தானவர்களுக்கு மறுமணம் செய்வதில் உள்ள பிரச்சனைகள், வேலைக்குச் செல்லும் இடங்களில் ஏற்படும் ஆண் மேலாதிக்கம் மற்றும் பாலியல் தொந்தரவுகள்,எதிர்த்து கேள்வி கேட்டால் பெண்ணைப் பற்றியே அவதூறு சொல்லும் நிலைக்கு ஆளாக்குதல் ஆகியன குறைந்திருந்தாலும் இன்றும் தொடர்கின்றன. இதனால் ஆண் குழந்தைகள் பிறக்க வேண்டும் என விரும்பும் மனநிலை முற்றாக மறையவில்லை.

நமது கலாசாரத்தில் குழந்தைகளின் வளர்ப்புமுறை ஆண்பெண் சமத்துவத்தை வலியுறுத்துவதாக இல்லை. ஆடைக்கட்டுப்பாடு, நேரக்கட்டுப்பாடு, வீட்டு வேலைகளில் உதவுதல், கல்வி முன்னுரிமை முதற்கொண்டு பல படிமுறைகளில் வீட்டுச் சூழலிலேயே ஆணாதிக்கத்தின் அத்திவாரம் இடப்படுகிறது. குழந்தைப் பருவத்தில் இருந்தே பெண் மனநலிவுக்கு உள்ளாக்கப் படுகின்றாள்.இதற்கு மாறாக ஆண்குழந்தைகள் மேலாதிக்க மனநிலையுடன் வளர்க்கப் படுகின்றனர்.இதனால் மணமாக முன் ஓரளவு சமத்துவமான வாழ்வினைக் கொண்ட பெண்களும், மணமான பின் உடலாலும் மனதாலும் சுதந்திரமான வாழ்வினை அடைய முடியாதவர்களாகவே இருக்கின்றனர். குடும்பத் தலைவியாகிய தாய் இதற்கு முக்கிய காரணமாகிறார் என்பது நகைப்புக்குரிய முரண்நிலை.இத்தகைய மனநிலை மாற்றம் பெறுவதற்கு, பெண்களை சமத்துவ நோக்குடனும் கண்ணியமான எண்ணங்களுடனும் அணுகுவதற்கு சிறுவயதில் இருந்தே குடும்ப மட்டத்தில் பெற்றோரும், பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களும் ஆண்குழந்தைகளை வழிப்படுத்துதல் அவசியமாகிறது.

புலம்பெயர்வுநமதுபெண்களின்வாழ்வில் சில விடியல்களையும் ஆண்களின் மனநிலையில் கணிசமான மாற்றங்களையும் கொண்டு வந்திருப்பது உண்மையே. எனினும் புலம் பெயர்ந்த முதல் தலைமுறையினரின் தாயக வேர்கள் இன்னும் தமக்கான பாரம்பரிய பழக்க வழக்கங்களை முற்றாக மறுதலிக்கவில்லை. திருமணச் சடங்குகளில் முக்கியமானதாகக் கருதப்படும் கன்னிகாதானம், தாரை வார்த்தல், பெண்ணுக்கு மட்டும் தாலி அணிவித்தல் முதலான திருமணச் சடங்குகளும் ஆணாதிக்கத்தை உறுதிப் படுத்தும் காரணிகளாக இன்றும் தொடர்கின்றன. இதனால் பெண்ணின் மீது ஆணுக்கு உடைமை மனநிலை தோற்றுவிக்கப் படுகிறது.

பெண்களின் உரிமைகளில் மிக முக்கியம் வாய்ந்ததாக சகல விதமான பாலியல் வன்முறைகளில் இருந்தும் விடுபடுதல் அமைகிறது. ஏனெனில் பால் நிலைமை சார்ந்தே பெண்ணுக்குரிய அனைத்துப்பிரச்சனைகளும் ஆரம்ப மாகின்றன. பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களே,குற்றம் செய்த ஆண்களை விட அதிக அவமானத்திற்கு உள்ளாகின்றனர். எதிர்த்து நியாயம் கேட்கும் பெண்ணைப் பற்றியே அவதூறு சொல்லும் விகார மனப்பான்மை இன்றும் பல பெண்களை ஊமைகளாகவே வைத்திருக்கின்றது.

எதிர்காலத்தில் இந்நிலையை இல்லாது ஒழிப்பதற்கு பெண் கல்வி, உலக அறிவு, பாலின மற்றும் சொத்துரிமைகள் பற்றிய அறிவூட்டல், பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் மூலமான பொருளாதார பலம், தன்நம்பிக்கை ஆகியவற்றை வளர்க்க வேண்டும். பெண்கள் தமது வாக்குரிமைகளை பாவித்து பெண் அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுத்தல் , சுயதொழில்களில் ஈடுபடுதல், பெண் சமத்துவம் பேணும் நிறுவனங்களை ஆதரித்தல், குடும்பத்திலும் சமூகத்திலும் தனது உரிமைக்காகப் போராடுதல் ஏனைய பெண்களையும் வழிப்படுத்தல் ஆகியவை நம்பிக்கை அளிக்கும் மாற்றங்களைத் தரும்.

ஆண்களைக் கவரும் பெண்மையின் மென்மையும் கவர்ச்சிகரமான உடலமைப்பும்,தெய்வீகத் தன்மையாக கருதப்படும் தாய்மையும் தான் பெண் பலவீனமாகக் கருதப்படுவதற்கும் காரணமாகின்றன என்பது வருத்தத்துக்கு உரியது. இந்த நிலை மாறி பாலின சமத்துவம் நிலைபெற வேண்டும் என்பது அனைவரினதும் இலட்சியமாக வேண்டும்.





வெற்றிமணி திருமண சேவை

இந்தியா, சென்னையில் பிறந்து ஜெர்மனியை வதிவிடமாக கொண்ட 30 வயது இந்து முதலியார் இனத்தைச் சேர்ந்த எங்கள் மகளுக்கு ஜெர்மனியை வதிவிடமாக கொண்ட இந்து மதத்தைச் சேர்ந்த மணமகனை எதிர்பார்க்கிறோம்.

மணமகள் ஜெர்மனியில் BONN UNIVERSITY யில் phd முடித்து தற்போது HAMBURG UNIVERSITY யில் POST DOCTORAL RESEARCHER ஆக பணிபுரிகிறாளர்.

ஜெர்மனியில் பணிபுரியும் மணமகன், திருமணத்திற்கு பின் மணமகளுடன் ஜெர்மனியில் வசிக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in

Wuppertal நகரில்... Asia Lebensmittel

மாதத்தில் முதல் வாரத்தில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை மளிகைப்பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.


மரக்கறி வகைகளுக்கும் | கடல் உணவு வகைகளுக்கும் | இன்றே நாடுங்கள்

+49 176 62728598 | 020289012114





Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany

# படமாகும் ஜெய்சங்கர் வாழ்க்கை



நடிகர், நடிகைகளின் வாழ்க்கை ஏற்கனவே சினிமா படங்களாக வந்து வரவேற்பை பெற்றுள்ளன. சமீபத்தில் மரணம் அடைந்த ஜமுனா வாழ்க்கையும் சினிமா படமாகிறது.

நடிகை ஸ்ரீதேவி வாழ்க்கையும் படமாக உள்ளது. இந்த நிலையில் மறைந்த பழம் பெரும் நடிகர் ஜெய்சங்கர் வாழ்க்கையையும் சினிமா படமாக எடுக்கும் முயற்சிகள் நடக்கின்றன. இதுகுறித்து ஜெய்சங்கரின் மகன் சஞ்சய் சங்கர் கூறும்போது,



"நிறைய பேர் எனது தந்தை ஜெய்சங்கர் வாழ்க்கையை படமாக எடுக்க கேட்கிறார்கள்.

இதனால் எங்களுக்கும் ஆர்வம் வந்துள்ளது. ஜெய்சங்கர் 1965-ல் வெளியான இரவும் பகலும் படத்தில் அறிமுகமாகி 1990-கள் வரை முன்னூறுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்து முன்னணி கதாநாயகனாக வலம் வந்தார். அவரை "தென்னகத்து ஜேம்ஸ் பொண்ட்" என்று அழைத்தனர்.

# ரஜினியுடன் நடிப்பது என் கனவு



தமன்னா தமிழில் ஜெயிலர் படத்தில் ரஜினியுடனும் தெலுங்கில் சிரஞ்சீவியுடன் போலோ ஷங்கர் படத்திலும் நடிக்கிறார். இதுகுறித்து தமன்னா அளித்துள்ள பேட்டியில், "ரஜினிகாந்துடன் நடிப்பேன் என்று இத்தனை ஆண்டுகளில் ஒரு தடவை கூட நான் நினைத்து பார்த்தது இல்லை. என்னை போன்ற எத்தனையோ நடிகைகள் அப்படி ஒரு வாய்ப்புக்காக காத்திருக்கையில் ஜெயிலர் படத்தில் அவ ரோடு நடிக்கும் வாய்ப்பு என க்கு கிடைத்தது.

படப்பிடிப்பில் அவரோடு இணைந்து நடிக்கும் அந்த நாளுக்காக மிகவும் ஆர்வமாக காத்துக் கொண்டிருக்கிறேன்.

எனது இத்தனை நாள் கனவு தற்போது நிறைவேறி விட்டது. இதை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. அவரோடு பாடல் காட்சிகளில் நடனம் ஆடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். அதற்காகவும் நான் காத்திருக்கிறேன்.

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கூடுவிட்டு கூடுபாய்வது போல்!...

இருந்தாலும் பதிவிட்டவர்களை ஃபேஸ் புக் இல் தேடிப்பிடித்து விட்டேன்.

தனது தாயை பார்ப்பதற்காக இங்கிலாந்தில் இருந்து, பருத்திதுறைக்கு சென்று, வருடத்தில் பல மாதங்களை தாயுடன் கழிக்கும் மகளும், மருமகனும் அவர்கள். அவர்களுக்கு போன் போட்டு, அந்த வெளிநாட்டவர்கள் யார்? வேட்டி சால்வை சேலை என அட்டகாசமாக படங்கள் பார்த்தேன், அவர்களுடன் நீங்களும் நிற்கிறீர்கள்,என்ன உறவு உங்களுக்கு என்றேன். அவர்கள் எமது நண்பர்கள் என்றார்கள், எந்த ஹோட்டலில் நிற்கிறார்கள் என்றேன், அவர்கள் இங்குதான் நிற்கிறார்கள். அவர் தேங்காய் துருவிகிறார், அவ முருககையிலை ஒடிக்கிறா, கதைக்ப் போகிறீர்களோ என்றா.

நான் கதைக்கவில்லை! அவர்கள் பற்றி அறியவே கேட்டேன். அவர்கள் பற்றி பல கதைகள் கேட்டேன். அவர்கள் சொன்னதில் இருந்து எமது காலாச்சாரம், பண்பாடு பற்றி நம்மோடு வாழ்ந்து அறிவதில் ஆர்வம் உள்ள தம்பதியினர் என்று அறிய முடிந்தது.

காலை உணவுக்கு தேங்காய் உரித்து, சம்பல் அரைப்பது, கடற்கரைக்கு சென்று மீன் நண்டு இறால் வாங்கி, நோண்டிச் சமைப்பது, வரை அவர்களும் இணைந்து செய்கிறார்கள். தேங்காய் உரித்தபோது தேங்காய் இப்படியா



என அதன் மூலத்தைக்கண்டு விழிந்தார்கள். 5நட்சத்திர ஹோட்டலில் காட்சிப்படுத்தலுக்கும், இங்கு இயல்பாக காட்சியாவதற்கும் நிறையவே வேறுபாடு கண்டார்கள்.மீன் வாங்க கடற்கரை சென்று, மீனவர்களுடன் கதைத்து அவர்கள் அனுபவங்களை கேட்டு, பேரம் பேசும் மனம் தளர்ந்து, அவர்களுக்கு உரியதைக் கொடுங்கள் என்று சொன்ன அந்த தம்பதிகளின் உள்ளம் பெரிது.

பின் முற்றத்தில் மண் சட்டியில் மீன்களை நீரால் அலசி,விறகு அடுப்பில் சமைத்து, சுவைக்க சுவைக்க உண்டனர். இந்த அனுபவ உணர்வுகளும், சுவையும் 5 நட்சத்திர ஹோட்டலில் அலங்கரிக்கப்பட்ட கோப்பையில் இருக்கும் மீன் குழம்பில் நிச்சயம் கிடையாது.

காலையில் எழுந்ததும் உடற்பயிற்சியை, வயதான தாய்க்கு,அவர் சொல்லிக்கொடுக்க, தாயகத்தில் முன்னோர் செய்த உடற்பயிற்சிகளை தாய் அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க, அங்கே ஒர் பாரம்பரிய உடற்பயிற்சி மாநாடே நடை பெறும்.

இலங்கையின் பல பாகங்களுக்கும், சுற்றுபயணம் சென்றார்கள். செல்லும் இடம் எல்லாம் அந்த அந்த இடத்திற்குரிய மரியாதையை கொடுக்கத் தவறவில்லை. ஆலயங்கள் என்றால் நான்கு மணிநேரமும், சேலையுடனும், வேட்டியுடனும் நின்று வணங்கி பிரசாதம் உண்டு மகிழ்ந்தனர். போகும்போது எப்பவும் மறவாது வாழைப்பழமும்,வடையும் எடுத்து செல்வார்கள். சீப்பு சீப்பாய்த்தான் வாழைப்பழம் காய்க்கும், என்று எண்ணியவர்கள், பழத்தை வாழைக்குலையாகக் கண்ட போது ஆச்சரியம் அடைந்தார்கள். வீட்டில் கோழி,வாழை,கீரை,தக்காளி,என்பவற்றை கண்ட போது, இங்கே பயோ என்று எதிலும் போடவேண்டிய அவசியம் இல்லை, என்று உளமார மகிழ்ச்சி அடைந்தார்கள்.

நாளை லண்டன் பயணம், நாம் பருத்தித் துறை வடை சுடவேண்டும். அவர்களுக்கும் மிக விருப்பம். அவர்கள் அதுதான் லண்டனுக்கு எடுத்து செல்லப்போகிறார்கள். அதுமட்டுமல்ல இங்கேயும் எம்முடன் அவர்கள்தான் சுடப்போகிறார்கள். என்றார்கள். ஒரு தாய் தன் இறுதிக் காலத்தில் எப்படி தன் பிள்ளையுடன் எப்படி மகிழ்வாக இருக்கின்றார் என்பதனையும் உணர்வோடு அவர்கள் கண்டு மகிழ்ந்து திரும்புகிறார்கள். இந்த 5 நட்சத்திரங்களுக்கு பக்கத்தில் இன்னும் எத்தனை நட்சத்திரங்கள் (Stars)வந்தாலும் இந்த வாழ்வுக்கு நிகரில்லை அல்வா. வெற்றிமணி பத்திரிகையில் நாமும் வருகிறோம் என்ற ஒருகுழந்தையின் சிரிப்போடு அவர்கள் இருப்பதைக் காணலாம்.

**படங்கள் உதவிய சாந்தி. தெய்வேந்திரன் அவர்களுக்கு நன்றி.**








Jasmine Silk House
ஆடைகளின் ராணி
15.03.2023 முதல்
15.04.2023 வரை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம்
அனைத்து ஆடைகளும் 2023ம் ஆண்டின்
புத்தம் புது வரவுகள்
உங்கள் வரவுகளும்
மகிழ்ச்சியாக அமையட்டும்.
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen




Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282




PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
SALE
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059




RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
யேர்மனில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1 Real Estate Agent
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
www.nagaselvam-remax.de




Photography
Cinematography
Album Making
Graphic Designing
akr
VISUALIZERS
Photography
AKRVISUALIZERS
+ 49 162 803 16 47
akrvisualizers
akrvisualizer@gmail.com
Asselner Hellweg 118 44319 Dortmund




STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698